# எதிரொலி

ஆஸ்திரேலியா
ETHIROLI

குரல் 09 அதிர்வு 105 பங்குனி 2026 editor@ethiroli.com தொ.பே:1800 960 162

Budget Friendly
Home Improvements Pty Ltd
Quality
Renovation Work
0400 287 198



## வல்லரசின் வன்மம்!







ஆஸ்திரேலியாவிலிருந்து வெளிவரும் தமிழ் மாத இதழ்

ROYAL INTERNATIONAL MONEY TRANSFERS

EASY • FAST • SAFETY

நாணயமிக்க பணப்பரிமாற்றம்
'டன்டிநொங்' இல்
புதியதோர் சேவை

BOC
PEOPLE'S BANK
COMMERCIAL BANK
HNB
Sampath Bank
UNION BANK
Amãna Bank
It's Your Bank

Same day bank transfer

No One Beat Our Rate

THE HUB ARCADE
4/131-147, Walker Street, Dandenong VIC 3175

(03) 87649143 0406409403
royalinfomoney@gmail.com

GRACE GROCERY
FRESH FINDS GREAT DEALS
INDIAN AND SRILANKAN

# GRACE GROCERY

INDIAN AND SRILANKAN GROCERY

**Our Current Location**

Casey Central (Narre Warren) and Clyde North next to ALDI/Bunnings

**Our New Locations Opening Soon**

- Mambourin Shopping Centre (Mambourin) - 2025 / • Farm Gate Local (Clyde) - 2025
- Ramlegh Shopping Centre (Clyde) - 2025 / • Orana Shopping Centre (Clyde) - 2026

# காலத்தை வென்றவன் (A man for all seasons)



ஆனந்தன் வசந்தா கிருஷ்ணமூர்த்தி

**1966** ஆம் ஆண்டு வெளியான, ஒஸ்கார் விருது வாங்கிய "A man for All seasons" திரைப்படத்தில் இங்கிலாந்து மன்னர் எட்டாம் ஹென்றி தனது மனைவி மூலம் ஆண் வாரிசு கிடைக்காததால் தனது மனைவியை விவாகரத்து செய்துவிட்டு, வேறு ஒரு இளம்பெண்ணை திருமணம் செய்ய முற்படுவார். போப் ஆண்டவர் மன்னரின் இந்தக் கோரிக்கையை மறுத்துவிட்டதால் கோபம் கொண்டு, ரோமிற்கும் இங்கிலாந்திற்கும் உள்ள உறவை முறித்துக்கொண்டு இங்கிலாந்தில் உள்ள தேவாலயத்தின் தலைவராக தன்னை அறிவித்தார். இந்த முடிவிற்கு உயர் அதிகாரியான சேர் தாமஸ் மோர் ஒருவரைத் தவிர அனைவரும் ஆதரவளிக்கின்றனர். அதையொட்டி மன்னருக்கும் அவரது நண்பருக்கும் ( சேர் தாமஸ் மோர்) இடையிலான உரையாடலின் ஒரு பகுதி பின்வருமாறு:

**மன்னர் ஹென்றி:** "ஓ, தாமஸ் ! ஒரு மனிதன் தான் எங்கே பாவம் செய்தான் என்று சொல்ல ஒரு போப் தேவையா? ராணியை ஒதுக்கி வைப்பது எனது உரிமை , பீட்டர் வரை அனைத்து போப்களும் எனக்கும் என் உரிமைக்கும் இடையில் வரக்கூடாது! அனைவரும் ஆதரவு தெரிவிக்கும்போது நீங்கள் ஏன் ஒத்துக்கொள்ள மறுக்கிறீர்கள் ?

**சேர் தாமஸ்:** "அப்படியானால் இந்த எளியவனின் ஆதரவு உங்களுக்கு எதற்குத் தேவை?"

**மன்னர்:**ஹென்றி "நீங்கள் நேர்மையானவர்.. மேலும் கொண்ட கொள்கைக்காக , நீங்கள் எப்பொழுதும் உங்கள் நேர்மை தவறி நடக்க மாட்டீர்கள் ".

நிலையின் திரியாது அடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது.

நான் சிறுவயதிலிருந்து அண்ணாந்து பார்த்த இடதுசாரி ஆளுமைகளான ஹர்கிஷன் சிங் சுர்ஜித், ஜோதி பாசு, என். சங்கரய்யா, நன்மாறன் போன்றோர் ஒருவர் பின்னே ஒருவராக மறையும்பொழுதெல்லாம் அவர் இடத்தை நிரப்ப இன்னொருவர் இன்றும் இருக்கிறாரே என்று நினைப்பேன். அந்த இன்னொருவர் என்பது தமிழ்நாட்டில் இருக்கும் சிறுபிள்ளை கூட சொல்லிவிடும். கட்சி சார்பற்று அனைவரும் அறிந்தவர். கடைசியாக கேரளத்து சிங்கம் வி.எஸ்.அச்சுதானந்தன் மறைந்த போது எனக்கிருந்த ஒரே ஒரு பிடிப்பு தோழர் நல்லக்கண்ணு மட்டுமே. அவரும் நம்மை விட்டு சென்று விட்டார் இந்த மாதம் பெப்ரவரி 26 அன்று காற்றில் கரைந்துவிட்டார். இனி நேர்மைக்கு உதாரணமாக யாரை சொல்லுவேன் ?உங்கள் நேர்மை இனி மேல் எங்கும் காண முடியாது . உங்கள் வெற்றிடத்தை யார் நிரப்ப முடியும்? அவரைப் பற்றி நான் படித்தது,கேட்டது, பார்த்தது எல்லாம் என் நெஞ்சில் நீங்காமல் சுழன்று கொண்டிருக்கும் இந்த நேரத்தில் அவரைப் பற்றிய ஒரு அஞ்சலிக் கட்டுரை எழுதுவதன் மூலமே இந்த துயரத்தை என்னால் தாண்டி செல்ல இயலும்.

திருநெல்வேலியிலுள்ள ஸ்ரீவைகுண்டத்தில் (தற்பொழுது தூத்துக்குடி) டிசம்பர் 26, 1925 பிறந்த நல்லக்கண்ணுவிற்கு இளவயதிலேயே போராட்டத்தில் ஈடுபடும் வாய்ப்பு கிடைத்திருக்கிறது. தனக்கு ஐந்து அல்லது ஆறு வயது இருக்கும் பொழுதே ஹார்வி மில்ஸ் பஞ்சாலை தொழிலாளர்கள் போராட்டத்தினை இளவயதில் கண்டதே எனக்கு பின்னாளில் மக்களுக்காக போரிடும் வலிமையத் தந்தது என்று கூறியிருக்கிறார்.

" எங்கள் ஊரில் உள்ள ஒவ்வொரு வீட்டிலிருந்தும் அரிசி சேகரிக்கப்பட்டு ,தூத்துக்குடியில் உள்ள வேலைநிறுத்தம் செய்பவர்களின் குடும்பங்களுக்கு பெட்டிகளில் அனுப்பப்படும். எங்களைப் போன்ற இளம் சிறுவர்கள்தான் அரிசி சேகரிக்கச் செல்வார்கள்." மக்கள் ஏழைகளாயிருப்பினும் ஒவ்வொரு வீட்டிலும் ஏதாவது பங்களிப்பு செய்தனர். அப்போது எனக்கு 5 அல்லது 6 வயதுதான், தொழிலாளர்களின் போராட்டத்துடனான இந்த ஒற்றுமை எனக்கு பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது." என்று அந்த நினைவுகளை பின்னொரு நாளில் விவரித்திருந்தார் அவர்.

சுதந்திரப் போராட்டத்தின் போது ஆரம்பத்தில் காங்கிரஸால் ஈர்க்கப்பட்ட நல்லக்கண்ணு காங்கிரஸ் கட்சிக்காக 1937 ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் மஞ்சள் பெட்டிக்கு வாக்களிக்க வேண்டும் என்று வீடு வீடாக சென்று வாக்கு சேகரித்திருக்கிறார். அந்தக் காலத்தில் இரண்டே கட்சிகள் தான் போட்டியிட்டிருக்கின்றன. மஞ்சள் பெட்டி என்பது காங்கிரஸ் கட்சிக்கும், பச்சை பெட்டி என்பது நீதிக் கட்சிக்கும் ஒதுக்கப்பட்டிருந்தன. அப்பொழுது அவருக்கு வயது 12. மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு, அவர் தேர்தலுக்கு அப்பாற்பட்ட அரசியல் பிரசாரங்களில் ஈடுபடத் தொடங்கினார். வேரூன்றிய சாதி மற்றும் வர்க்க ஒடுக்குமுறை அமைப்புகளை அரசியல் சுதந்திரம் மட்டுமே அகற்றாது என்பதை அறிந்துகொண்டார் t.c. சிதம்பரம் பிள்ளையின் சுதேசி கொள்கைகளாலும், சுப்பிரமணிய பாரதியின் சமத்துவக் கண்ணோட்டத்தாலும், மார்க்சிய சிந்தனையை நோக்கி ஈர்க்கப்பட்டார். அவர் 15 வயதிலிருந்தே இந்திய கம்யூனிஸ்ட் கட்சியில் ஜஊஹீஜஸ இருந்த போதிலும் கட்சியின் முறையான உறுப்பினர் பதவிக்கு அவர் 18 வயது ஆகும் வரை காத்திருக்க வேண்டியிருந்தது. அதாவது மஞ்சள் பெட்டிக்கு வாக்கு சேகரித்த 12 வயது சிறுவன் பின்னாளில் அடுத்து வந்த 80 ஆண்டுகளுக்கு செங்கொடியின் புகழ்பாடினார் .

சுதந்திரப் போராட்டத்தில் காங்கிரஸ் மேற்கொண்ட அனைத்து போராட்டங்களில் பங்கேற்ற போதிலும் , அவர் குறிப்பிடும்படி சொல்வது உப்பு சத்தியாகிரகப் போராட்டமும் , வெள்ளையனே வெளியேறு போராட்டங்களையும் தான். தூத்துக்குடியைச் சுற்றியிருந்த உப்பளங்கள் அனைத்தும் பிரிட்டிஷ் அரசாங்கத்தால் நடத்தப்பட்டு வந்தது. ஆதலால் அங்குள்ள தொழிலாளர்கள் சார்ந்த அனைத்து போராட்டங்களிலும் காவலர்களின் கெடுபிடி இருந்திருக்கிறது. காவலர்கள் இரவினில் ஊர்களில் முகாமிட்டு தங்கும் நாட்களில் சிறுவனான நல்லக்கண்ணு அவர்கள் மீது கற்களை வீசி விரட்டியடித்திருக்கிறார் பிறகு வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் சேர்ந்து கொண்டு பள்ளிக்கு செல்லாமல் போராட்டங்கள் நடத்தியிருக்கிறார். பள்ளிக்கூடத்திற்கு செல்லாமல் போராட்டங்களுக்கு செல்வது அவரது தந்தை ராமசாமிக்கு பிடிக்கவில்லை. ஆறு குழந்தைகளுக்கு தந்தையான நல்லக்கண்ணுவின் தந்தை 4-5 ஏக்கர் நிலம் வைத்திருந்தார் . இவர் தொடர்ச்சியாக இப்படி போராட்டங்களுக்கு போவது பிடிக்காத அவரது தந்தை பள்ளிக் கட்டணம் செலுத்துவதை நிறுத்திவிடுவார்.தந்தை எவ்வளவுக்கெவ்வளவு எதிர்த்தாரோ அவ்வளவுக்கவ்வளவு போராட்டங்களில் ஈடுபட்டு எப்படியோ பள்ளிப் படிப்பை முடித்த நல்லக்கண்ணு திருநெல்வேலியில் இருந்த மதுரைக்கல்லூரியில் இரண்டு ஆண்டுகள் படித்திருக்கிறார். அதன் பின்பு அவரால் படிக்க முடியவில்லை.



கம்யூனிஸ்ட் கட்சியில் சேர்ந்த பிறகு நல்லக்கண்ணு விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்களை, ஒருங்கிணைப்பதில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். சகஜானந்த் சரஸ்வதி போன்ற தலைவர்களால் உருவாக்கப்பட்ட விவசாயிகள் சங்கம் எனும் அமைப்பிற்குள் பணியாற்றி, விவசாய தொழிலாளிகள் இடையிலான நிலப்பகிர்வு, குறைந்தபட்ச கூலி மற்றும் சுரண்டல் மிகுந்த நிலப்பிரபுத்துவ நடைமுறைகளை ஒழித்தல் போன்ற கோரிக்கைகளுக்காக கிராமப்புற ஏழை விவசாயிகளை ஒன்றுதிரட்டி பல்வேறு போராட்டங்கள் நடத்தியிருக்கிறார். "உழுபவனுக்கே நிலம் சொந்தம் " என்பதே இந்த அமைப்பின் கொள்கை . அவரது பணி விவசாயத் தொழிலாளர்களிடையே உழைக்கும் மக்களின் வர்க்க உணர்வை வலுப்படுத்தவும், சக்திவாய்ந்த நிலப்பிரபுத்துவ முதலாளிகளின் ஆதிக்கத்தை எதிர்க்கவும் உதவியது. இருப்பினும் கம்யூனிஸ்ட் கட்சியின் வளர்ச்சியை கண்டு பயந்த அரசு அடக்குமுறையைத் தூண்டியது. 1948 இல் கட்சி தடை செய்யப்பட்ட பிறகு, நல்லக்கண்ணு தலைமறைவானார். பிறகு நெல்லை சதி வழக்கில் 1949 இல் கைது செய்யப்பட்ட அவருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது , 1956 இல் விடுவிக்கப்படுவதற்கு முன்பு காவலில் பலமுறை சித்திரவதை செய்யப்பட்டார். இந்த ஏழு வருட சிறைவாசம் அவரது கம்யூனிஸ்ட் சித்தாந்தத்தின் மேலான பிடியை இன்னும் உறுதிப்படுத்தியது .

நல்லக்கண்ணு எப்படி தான் நம்பிய சித்தாந்தத்தில் உறுதியுடன் இருந்தாரோ ,அதே அளவில் தனிப்பட்ட அளவில் மிகவும் மென்மையானவர் என்று அவருடன் பழகியவர்கள் குறிப்பிடுகின்றனர்.1995 ஆம் ஆண்டுகளில் தென் தமிழகத்தில் தொடர்ச்சியாக சாதிக்கலவரங்கள் நடந்தன. அப்பொழுது தூத்துக்குடியில் நடைபெற்ற கலவரத்தில் நான்கு பேர் கொல்லப்பட்டனர். அதில் 84 வயதான நல்லக்கண்ணுவின் மாமனாரும் ஒருவர். தாங்கவொணா துக்கமும் ,ஆத்திரமும் நிறைந்திருக்கும் அந்த நேரத்தில் தனது மாமனாரின் இறுதிச்சடங்குகளில் கலந்துகொள்வதற்கு முன்பு கலவரத்தால் பாதிக்கப்பட்ட கிராமங்களில் அமைதிப் பேரணியில் கலந்துகொண்டிருக்கிறார். நெஞ்சில் சிறிதும் கசப்பும் இல்லாத அறம் காக்கும் ஒருவரால் மட்டுமே இவ்வாறு செய்ய முடியும் அல்லவா. எப்படிப்பட்ட தலைவர்கள் நம் நாட்டில் வாழ்ந்திருக்கின்றனர். நாம் என்றைக்காவது அவருக்குண்டான நியாயமான பதவியோ, அதிகாரமோ வழங்கியிருக்கிறோமோ. இல்லை என்பது தான் நிதர்சனம் தமிழ்நாட்டில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளராக 13 ஆண்டுகள் பணியாற்றிய அவரால் 1999 கோயம்புத்தூர் நாடாளுமன்றத் தொகுதி உட்பட தேர்தல்களில் போட்டியிட்ட போதிலும் ஒருபோதும் எந்த தேர்தலிலும் வெற்றி பெறமுடியவில்லை. அதுவும் கோவை குண்டுவெடிப்புக்குப் பின்னர் நடந்த தேர்தலில் , முஸ்லீம் மக்களை கூட்டிக்கொண்டு வாக்கு சேகரிக்க வேண்டாம் என்று கூட்டணியினர் எச்சரித்த போதிலும் ,எது தனக்கு சரியென்று படுகிறதோ அதனை மட்டும் நேர்மையாகச் செய்ததால் தன்னை எதிர்த்து நின்ற பாரதிய ஜனதா வேட்பாளரிடம் தோற்றுப்போனார் .

1980ஆம் ஆண்டுகளில் போஃபர்ஸ் ஊழல் இழைத்த ஆளும் காங்கிரஸ் கட்சியை எதிர்த்து கன்னியாகுமரியில் இருந்து சென்னை வரை பாதயாத்திரை மேற்கொண்டார். தனது 95 வயதிலும் தளராமல் தாமிரபரணி ஆற்றில் சட்டவிரோத மணல் அள்ளுவதை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரை கிளையில் தனிப்பட்ட முறையில் வாதிட்டார், அவரது தொடர்ச்சியான உண்ணாவிரதப் போராட்டங்களால் கண்மூடித்தனமாக கனிம வளங்களை சுரண்டும் சுரங்கத் தொழிலுக்கு நீதித்துறை தடை விதித்தது. அரசியல் என்றாலே நாம் அறிந்ததெல்லாம் ஆடம்பரமும் ,அதிகாரமும். அவருடன் அரசியலுக்கு வந்தவர்கள் மாட மாளிகைகளிலும், தங்களுக்கு பிறகே வரும் 10-15 தலைமுறைகளுக்கு சொத்துகளை குவித்தபோதிலும்

நல்லக்கண்ணு மிக எளிமையாகவே வாழ்ந்தார். அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்ட ஒரு சாதாரண வீட்டிலேயே தனது இறுதிக்காலம் வரை வாழ்ந்திருக்கிறார். கட்சி வழங்கும் உதவித்தொகை மற்றும் அவரது மனைவியின் ஒய்வூதியம் ஆகியவற்றை கொண்டு தனது அடிப்படைத் தேவைகளை கடைசிவரை பார்த்துக்கொண்டார் . தனக்கு வழங்கப்பட்ட விருதுகளின் மூலம் கிடைத்த அனைத்துப் பணத்தையும் கட்சிக்கே திரும்பி வழங்கிய மகான். இனிமேல் இவரைப்போல் யார் இருக்கிறார் என்று நம் எல்லோரையும் ஏங்க வைத்தவர் நம்மை விட்டு போய்விட்டார். நான் நம்பிய நேர்மைக்கு வயது 102.

குருதிப்புனல் படத்தில் கமிஷனர் ஆதி எனும் கதாபாத்திரத்தில் நடித்த கமல் பேசும் ஒரு வசனம் உண்டு , "நான் கடவுளைக் கூட கும்பிடலை . நேர்மையை மட்டும் தான் நம்பினேன்". என்று சொல்வார். அது போன்று தனது இறுதி நொடி வரை நேர்மையை மட்டுமே நம்பிய நல்லக்கண்ணு காலத்தை வென்றவர் இன்னும் ஆயிரமாயிரம் ஆண்டுகள் கடந்தாலும் எப்படி கக்கன் அவரது நேர்மைக்காக கொண்டாடப்படுகிறாரோ, நேர்மை என்ற சொல் இருக்கும்வரைக்கும் நல்லக்கண்ணுவும் இருப்பார்.


தாயக கலாசார
ஆபரணங்கள்
மெல்பேர்ணில்...
லக்கி
நகைத் தொழிலகம்
LUCKY JEWELLERY
பொன்னுருக்குதல்
தாலி செய்தல்
கல்யாண மோதிரம்
காது குத்துதல்
தமிழ் எழுத்துகளில் ஆபரணங்கள்
திருத்த வேலைகள் உடனடியாக
14/38 Mccrae Street, Dandenong VIC3175
luckysankaran@gmail.com
LuckyJewelleryMelborne
0387121974, 0415233284

எதிரொலி
ஆஸ்திரேலியா ETHIROLI
குரல்:08 அதிர்வு: 105 பங்குனி 2026 தொ.பே:1800 960162

# அமெரிக்காவின் அக்கப்'போர்'!

ஈரான் மீதான அமெரிக்கா மற்றும் இஸ்ரேலின் கூட்டு ராணுவ நடவடிக்கையானது மத்திய கிழக்கில் மட்டுமல்ல ஒட்டுமொத்த உலகிலும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. மத்திய கிழக்கை சூழ்ந்துள்ள போர் மேகம் பிராந்திய எல்லைக்கு அப்பால் பூகோள அரசியல், பொருளாதார நெருக்கடிக்கும் வழிசமைத்துள்ளது.

இப்போரானது சர்வதேச எரிசக்தி பாதுகாப்பு முதல் வல்லரசுகளின் மேலாதிக்கம் வரை அனைத்திலும் நேரடித் தாக்கங்களை ஏற்படுத்திவருகின்றன. மறுபுறத்தில் பிராந்திய பாதுகாப்புக் கட்டமைப்பில் ஒரு புதிய பரிமாணத்தை உருவாக்கியுள்ளது.

மத்திய கிழக்கில் ஈரானின் செல்வாக்கைத் தடுத்து நிறுத்துவதற்காக அமெரிக்காவும் இஸ்ரேலும் மேற் கொண்டு வரும் கூட்டு நடவடிக்கைகள், பிராந்தியத்தின் பாதுகாப்புச் சூழலை ஒரு போர்முனைக்கு கொண்டு சென்றுள்ளன.

குறிப்பாக ஈரான் தனது புவிசார் பலத்தையும், ஹார்முஸ் நீரிணையின் மீதான தனது பிடியையும் பயன்படுத்தி, தன்னை நிலைநிறுத்திக் கொண்டுள்ளது. இது இஸ்ரேல், அமெரிக்கக் கூட்டணிக்கு பெரும் தலையிடியை ஏற்படுத்தியுள்ளது.

புவிசார் அரசியல் நெருக்கடிகளில் ஹார்முஸ் நீரிணை ஒரு வலிமையான மூலோபாய ஆயுதமாக உருவெடுத்துள்ளது. இது வெறும் ஒரு நீர்வழிப் பாதை மட்டுமல்ல, உலகப் பொருளாதாரத்தின் நாடித் துடிப்பைத் தீர்மானிக்கும் சக்தியாகும்.

ஈரானின் கட்டுப்பாட்டில் உள்ள இந்த நீரிணையில் ஏற்படும் சிறு சலனம் கூட, உலகளாவிய விநியோகச் சங்கிலியில் ஈடுசெய்ய முடியாத பாதிப்புகளை ஏற்படுத்தும் என்பதை தற்போதைய சூழ்நிலை உணர்த்தியுள்ளது.

உலக நாடுகளுக்கான கச்சா எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு போக்குவரத்தில் பெரும் முட்டுக் கட்டையை ஏற்படுத்தியுள்ளது.

எரிசக்தித் தட்டுப்பாடு காரணமாக சர்வதேச சந்தை யில் கச்சா எண்ணெய் விலை அதிகரிப்பு ஏற்பட்டு ஆஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகளில் விலை அதிகரிப்பும் இடம்பெற்றுள்ளது.

ஹார்முஸ் நீரிணையை பாதுகாப்பதற்கு அமெரிக்கா விடுத்த அழைப்பை நேட்டோ நாடுகள் நிராகரித்துள்ளன. இது அமெரிக்காவுக்கு பலத்த அடியாகும்.

மத்திய கிழக்கில் நிலவும் அதிகார வெற்றிடமும், அமெரிக்காவின் பாரம்பரிய செல்வாக்கில் ஏற்பட்டுள்ள விரிசல்களும் ரஷ்யா மற்றும் சீனாவிற்கு ஒரு சாதகமான களத்தை அமைத்துக் கொடுத்துள்ளன.

ரஷ்யாவின் ராணுவ ரீதியான ஈடுபாடும், சீனாவின் பொருளாதார மற்றும் முதலீட்டு ரீதியான அணுகு முறையும் பிராந்தியத்தில் ஒரு "சக்தி சமநிலை மாற்றத்தை" ஏற்படுத்தும் என்ற அச்சம் அமெரிக்காவை சூழ்ந்துள்ளது.

மத்திய கிழக்கில் தற்போது நிலவும் சூழலானது, உலக அரசியல் வரலாற்றில் ஒரு நெருக்கடியான திருப்பத்தை ஏற்படுத்தப்போகின்றது என்பது கசப்பான உண்மையாகும்.

எனவே, மத்திய கிழக்கின் இந்த உருமாறும் நெருக்கடியானது உலகளாவிய பாதுகாப்பிற்கு விடுக்கப் பட்டுள்ள சவாலாகும். உலக பொருளாதாரத்துக்கான அச்சுறுத்தலாகும். எனவே, ஒவ்வொரு நாடும் இந்தச் சிக்கலான அதிகார மாற்றங்கள் குறித்து மிக ஆழமான அரசியல் புரிதலை வளர்த்துக் கொள்வதும், அதற்கேற்பத் தயார்படுத்திக் கொள்வதும் இன்றைய காலத்தின் தவிர்க்க முடியாத கட்டாயமாகும்

# என்.பி.பி. ஒரு மாயமான்!

● கருணாகரன்

தேசிய மக்கள் சக்தி (NPP) அரசாங்கத்தை இலங்கையில் மட்டுமல்ல, புலம்பெயர் நாடுகளில் உள்ள தமிழர்களில் ஒருசாராரும் மிகுந்த நம்பிக்கையோடும் மதிப்போடும்தான் இன்னும் பார்க்கிறார்கள். 'இன்னும்' என்று இங்கே அழுத்தம் கொடுக்கப்படுவது, NPPயின் கடந்த ஒன்றரை ஆண்டுகால ஆட்சியைக் கண்டறிந்த பிறகும் என்பதைக் குறிக்கும். ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்க, பிரதமர் ஹரிணி அமரசூரிய இருவரின் மீதான நம்பிக்கையும் மதிப்புமே NPP யின் மேலுள்ள நம்பிக்கைக்கு முக்கியமான காரணம். இந்த இருவரையும் கடந்து 'எவரைப் பற்றியும்' 'எதைப் பற்றியும்' இவர்கள் அக்கறைப்படவில்லை.

தேசிய மக்கள் சக்தியின் மென்போக்கான - கவர்ச்சிகரமான முகங்களாக அநுரகுமார திசநாயக்கவும் ஹரிணி அமரசூரியவும் உள்ளனர் என்பது உண்மைதான். ஆனால், இந்த இருவரையும் விட தேசிய மக்கள் சக்தியைக் கட்டுப்படுத்தும் ஆற்றலோடு இருப்பவர்கள் ஜே.வி.பி. யின் செயலாளர் ரில்வின் சில்வாவும் அவருடன் உள்ள அணியினரும் தான். தேசிய மக்கள் சக்தியில் வலுவான தரப்பும் ஜே.வி.பி.தான். ஆகவேதான் ஜே.வி.பி,யின் தெரிவுகளிலும் பெரும்பாலான காலமும் செய்து வந்திருக்கின்றனர். இதில் முற்போக்குச் சிந்தனையைக் கொண்டிருந்த முகாமைச் சேர்ந்தவர்களும் இப்பொழுது சேர்ந்துள்ளனர் என்பதே கவலைக்குரியது. அரசியலில் செல்வாக்குச் செலுத்தும் மூட நம்பிக்கை தலைமுறைகளின் எதிர்காலத்தையே பலியிட்டு விடும்.

தேசிய மக்கள் சக்தியை - அதனுடைய இன்றைய போக்கை அல்லது நிலைப்பாட்டை நாம் புரிந்து கொள்வதற்கு ஒரு எளிய சான்று.

தேர்தலுக்கு முன் அல்லது தேர்தலின்போது NPP தெரிவித்ததைப் பார்க்கலாம்:

1. முறைமை மாற்றம் (System Change)
2. தனியார் மயமாதலைத் தடுப்பது
3. பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குவது
4. புதிய அரசியலமைப்பை உருவாக்குவது
5. ஜனநாயக அடிப்படைகளைப் பேணுவது
6. இனப்பாகுபாட்டை நீக்குவது
7. ஜனாதிபதி ஆட்சிமுறையை இல்லாதொழிப்பது
8. IMF உடன்படிக்கையை மறுசீரமைத்தல்
9. விரிவான மற்றும் நிலையான பொருளாதார கொள்கையை உருவாக்குதல்



அரசியல் நிலைப்பாட்டைக் கடந்து அநுரகுமார திசநாயக்கவினாலும் ஹரிணியினாலும் எதையும் செய்ய முடியாது; செய்ய முடியாமலிருக்கிறது. அதாவது, தேசிய மக்கள் சக்தி என்பது ஜே.வி.பி.யின் மறைக்கப்பட்ட முகமாகும். இதனால்தான் தேசிய மக்கள் சக்தி தேர்தலின்போது பிரகடனம் செய்தவற்றை இப்பொழுது செயற்படுத்த முடியாமல் தவி(ர்)க்கிறது. அதற்கான அனுமதியை ஜே.வி. பி. வழங்கவில்லை. பயங்கரவாதத்தடைச் சட்டத்தை நீக்க மறுப்பது தொடக்கம் மாகாணசபைகளுக்கான தேர்தலைத் தவிர்ப்பது, இனப்பிரச்சினைக்கான தீர்வைப் பற்றிப் பேசாமல் விடுவது வரையில் அனைத்துமே ஜே.வி.பி.யின் தீர்மானங்கள்தான். அடிப்படையில் ஜே.வி.பி.யும் ஏனைய இனவாதச் சக்திகளைப்போன்றே சிந்திக்கிறது் செயற்படுகிறது என்பதைப் பல ஆதாரங்களோடு பலரும் எழுதியும் பேசியும் நிரூபித்தாயிற்று. ஆனாலும் 'NPP யின் அபிமானிகளைப் பொறுத்தவரையில், இதற்கு முன்பிருந்த ஐ.தே.க, சு. க. பொதுஜன பெரமுன போன்ற தரப்புகளை விட தேசிய மக்கள் சக்தி பரவாயில்லை; முற்போக்கானது; ஜனநாயக விழுமியத்தைப் பேணுவது என்ற நம்பிக்கைக்குள் மூழ்கி விட்டனர். அதனால் வெளிப்டையாகவும் மறைமுகமாகவும் NPP - JVP செய்கின்ற இனவாத நடவடிக்கைகளையும் வாக்குறுதி மீறல்களையும் பரிசீலிக்க முடியாதவர்களாக இருக்கிறார்கள். இது ஆபத்தானது. ஏன் இது ஆபத்தானது என்று சொல்கிறோம் என்றால், கேள்விக்கிடமில்லாத எத்தகைய நம்பிக்கையும் ஆதரவும் ஆபத்தானதே. அது மூட நம்பிக்கையாகும். மூட நம்பிக்கைக்கு அளிக்கப்படுகிற கண்மூடித்தனமான ஆதரவாகும். அப்படிக் கண்மூடித்தன மான ஆதரவையே தமிழர்கள் தங்களுடைய அரசியல்

தேர்தலுக்குப் பின் அல்லது கடந்த ஒன்றரை ஆண்டுகால ஆட்சியில் என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பதைக் கவனிக்கலாம்:

1. முறைமை மாற்றத்தைப்பற்றி (System Change) NPP மறந்து விட்டது. அதைப்பற்றிப் பேசுவதே இல்லை.

2. சத்தமேயில்லாமல் இலங்கை மின்சார சபை (CEB) தனியார் மயமாக்கப்பட்டுள்ளது. இனிமேல் Electricity Distribution Lanka – EDL என்றே இது அழைக்கப்படும். மேலும் பல அரச திணைக்களங்களும் அதிகார சபைகளும் இப்படி மாற்றம் பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

3. பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கு (PTA) மாற்றீடாக பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் (Anti-Terrorism Act - ATA) கொண்டுவரப்பட உள்ளது. இது மேலும் பயங்கரமானது.

4. புதிய அரசியலமைப்பை உருவாக்குவது என்பது கனவு அல்லது கதை (கயிறு) விடல்போலவே உள்ளது. காலவரையறையைப் பற்றிப் பேசாமல் கதை அளவில் அரசியலமைப்பு விவகாரம் உள்ளது. இது தொடர்பாக எத்தகைய உத்தரவாதத்தையும் மக்களுக்கு வழங்கவில்லை.

5. ஜனநாயக அடிப்படைகளைப் பேணுவது என்பது கேள்விக்குள்ளாகி விட்டது. பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கு (PTA) மாற்றீடாக பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் (Anti-Terrorism Act - ATA) கொண்டுவரும் முயற்சியே ஜனநாயக அடிப்படைகளில் கை வைப்பதுதானே!

6. இனப்பாகுபாட்டை நீக்குவது என்பது பேச்சுக்கு அப்பால் நடைமுறையில் இல்லை. இன்னும் பௌத்தத்திற்கும் சிங்களத்திற்கும்தான் முன்னுரிமை வழங்கப்படுகிறது. ஜனநாயக அரசியலில் மத அமைப்புகளும் மத தலைவர்களும்

(07ஆம் பக்கம் பார்க்க)

## வாசகர் களம்

எதிரொலியில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்கள் குறித்து வாசகர்களின் கருத்துகள் எதிர்பார்க்கப்படுகின்றன. காத்திரமான கருத்துகள் பிரசுரிக்கப்படும். அதுமட்டுமின்றி எதிரொலி பேசாத சமூக கருத்துகளையும் எழுதி அனுப்புங்கள்.

நன்றி

ஆசிரியர்பீடம், எதிரொலி

editor@ethiroli.com
PO Box 6313, Dandenong
Victoria 3175

# என்.பி.பி. ஒரு மாயமான்!

(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரம் செலுத்துவதற்கு அனுமதிக்கும் வரையில் இனப்பாகுபாடு நீடித்தே தீரும். மட்டுமல்ல, முன்னரை விட இப்பொழுதுதான் தனிச் சிங்களத்தில் அரச அறிவிப்புகளும் கடிதங்களும் அதிகமாக வருகின்றன. அபிவிருத்தி, அரசியல் உரிமைகள் போன்றவையும் இனவாத அடிப்படையிலேயே நடக்கின்றன.

7. ஜனாதிபதி ஆட்சிமுறையை இல்லாதொழிப்பதைப் பற்றிய பேச்சையே காணவில்லை. அதிகாரச் சுவைக்கு NPPயும் அநுரகுமார திசநாயக்கவும் உட்பட்டுள்ளது காரணமாகும்.

8. IMF உடன்படிக்கையை மறுசீரமைத்தலுக்குப் பதிலாக அதனை மேலும் வலுவாக்குதலே நடக்கிறது. IMF இன் மடியில் NPP யும் NPP யின் மடியில் IMF உம் ஆக இந்த நாடகம் போய்க் கொண்டிருக்கிறது.

9. தேர்தல் நேரம் கூறிய 'விரிவான மற்றும் நிலையான பொருளாதார கொள்கை'யை எப்போது, எங்கே உருவாக்குவர் என்று தெரியவில்லை. இவையெல்லாம் மாயமான் போலவே உள்ளன.

இதைப்போல நேரெதிராக NPP அரசாங்கம் செயற்பட்டுக் கொண்டிருக்கிறது. இதையெல்லாம் வெளிப்படையாகவே அது செய்கிறது. இதை நன்றாகத் தெரிந்து கொண்டும் NPP யின் ஆதரவாளர்கள், நியாயம் கற்பிக்க முற்படுவது எதற்காக?

இதேவேளை NPP யின் ஆட்சியில் ஊழல் ஒழிப்பு, போதைப்பொருள் பாவனை முறியடிப்பு, ஊழல்வாதிகள் மீதான நடவடிக்கை, ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் மீதான விசாரணைகள், அதிகாரத் துஷ்பிரயோகம் மற்றும் முன்னாள் ஜனாதிபதிகளுக்கான சலுகைகள் நீக்கம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான ஓய்வூதியம் நீக்கம் என்பன நடைமுறைக்கு வந்துள்ளன. "சமூக சக்தி" வேலைத் திட்டம் மூலம் கிராமப்புறப் பொருளாதாரத்தை வலுப் படுத்துதல் மற்றும் மக்களைப் பொருளாதார பங்கேற் பாளர்களாக மாற்றுதல் எனப் பல வேலைத் திட்டங்கள் நடக்கின்றன என்றொரு வாதம் NPP யின் ஆதரவாளர்களால் முன்வைக்கப்படுகிறது. குறிப்பாக முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க உட்பட ஊழல் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டவர்கள் மீது விசாரணைகள் மற்றும் கைதுகள் முன்னெடுக்கப்பட்டன. யாரும் கைவைக்க முடியாது என்ற சுரேஸ் சாலே மற்றும் அரசாங்கத்துக்குச் சவால் விட்டுக் கொண்டிருந்த பொலிஸ்மா அதிபரான ரி.எம்.டபிள்யூ. தேசபந்து தென்னக்கோன் போன்றோரைப் பிடித்து உள்ளே தள்ளி விசாரணைக்குட்படுத்தியமை போன்றவை NPP யின் சாதனைகளாகச் சொல்லப்படுகின்றன. NPP யின் சார்பாகப் பேசும் அரசியல் எழுத்தாளர்கள், 'தேசிய மக்கள் சக்தி உலக அரங்கில் மிக வெற்றிகரமாக தனக்கான அங்கீகாரத்தையும் செல்வாக்கையும் பெற்றுள்ளது. அநுரகுமார திசநாயக்கவின் சிநேகபூர்வமான உறவாடலையும் தேசிய மக்கள் சக்தியின் ஆட்சி முறையையும் வெளியுலகம் ஆர்வத்தோடு வரவேற்கிறது. ஒரு ஆயுதமேந்திய இயக்கத்தின் ஜனநாயக ஆட்சி அவர்களுக்குத் திருப்தியளிக்கிறது' என்று புகழ்கிறார்கள்.

இவை பாதியளவு உண்மையே. இதை நாம் சற்று ஊன்றிக் கவனிக்க வேண்டும்.

1. இனப்பிரச்சினைக்குத் தீர்வைக் காணாதவரையில் இலங்கையில் அமைதியோ, பொருளாதார முன்னேற்றமோ கிடையாது. அரகலய எழுச்சியின்போதும் தேர்தலின்போதும் பொருளாதார நெருக்கடியின்போதும் இந்த விடயம் நாடு முழுவதும் உணரப்பட்டது. ஆனால், NPP இதை மறுபடியும் மறைத்து, இந்த உண்மையிலிருந்து மக்களை இனவாதத்தின் பக்கமாகத் திருப்பிச் செல்கிறது. இது குற்றச்சாட்டுத்தான். அல்லது இனவாத சக்திகளுக்கு உடன்பட்டுத் தன்னை இழக்கிறது. ஆக இனப்பிரச்சினைக்கான தீர்வு மறுதலிக்கப் படுகிறது. இனவாதம் மறுபடியும் வளர்க்கப்படுகிறது.

2. பொருளாதார மீட்சியைப் பற்றிச் சிந்திப்பதாக இருந்தால், இனப்பிரச்சினையைத்தீர்ப்பது மட்டுமல்ல, இனவாத அடிப்படையில் பொருளாதாரத் திட்டங்களைப் பற்றிச் சிந்திக்கவும் கூடாது. ஆனால், அரசாங்கம் இனவாத அடிப்படையில்தான் சிந்திக்கிறது. குறிப்பாக சுற்றுலாத் துறையை விரிவாக்கி, மேம்படுத்துவதற்கு அது முயற்சிக்கிறது என்று சொல்லப்படுகிறது. இதற்காக யாழ்ப்பாணத்துக்கு கூடுதல் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் கூறப்படுகிறது. காங்கேசன்துறை துறைமுகம், பலாலி விமான நிலையம், உள்ளூர் வீதிகள், வடக்கின் கடலோரங்கள், வரலாற்று அடையாளமுடைய இடங்கள் எல்லாவற்றின் அபிவிருத்தியையும் மந்தமாக்கி விட்டு, சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதென்பது வேடிக்கையானதே. அதாவது இனப் பாகுபாட்டையும் பாரபட்சத்தையும் பேணிக் கொண்டு எத்தகைய அபிவிருத்தியையும் முன்னேற்றத்தையும் எட்ட முடியாது.

இந்த உண்மை NPP க்கோ JVP க்கோ தெரியாதென்றில்லை. இருந்தும் அவர்கள் இனவாதத்திலிருந்து ஏன் விலக விரும்பவில்லை என்றால் -

1. அடிப்படையில் அவர்களும் இனவாதிகளே. அதாவது மேலாதிக்கச் சிந்தனையாளர்களே.

2. இனவாதத்தைக் கைவிட்டால், சிங்கள பௌத்த வாதத்தை விலக்கினால் அல்லது பலவீனப்படுத்தினால் தமக்கான அரசியல் எதிர்காலம் கேள்வியாகி விடும். ஆதரவுத் தளம் இல்லாமற்போய் விடும் என்று அச்சமடைகிறார்கள்.

இவை இரண்டும் முன்னைய ஆட்சியாளர்களிலிருந்து NPP யை வேறுபடுத்தப்போவதில்லை. அப்படி வேறுபடுத்தவில்லை என்றால், NPP யின் ஆட்சியும் புதிதான ஒன்றாக இருக்கப்போவதில்லை.

NPP யின் பலம் என்பது அதனுடைய புத்தாக்கச் சிந்தனையினாலோ புதிய செயற்பாடுகளினாலோ ஏற்படவில்லை. தென்னிலங்கையில் ஐ.தே.க, ஐக்கிய மக்கள் சக்தி, பொதுஜன பெரமுன, சு. க உள்ளிட்ட சிங்களக் கட்சிகளினாலும் வடக்கு- கிழக்கில் தமிழ்க் கட்சிகளினாலும் உருவாகியதே. இவற்றின் பலவீனத்தைத் தனக்குச் சாதமாக மாற்றிக் கொண்டதே NPP யின் பலமாகும். இந்தக் கட்சிகளுக்கும் இவற்றின் தலைமைகளுக்கும் மக்களிடத்தில் இருக்கும் அதிருப்தியே NPP யின் பக்கமாக மக்களைத் திருப்பியது. இந்த அலை நீடிக்கும் என்றில்லை. இந்தக் கட்சிகள் தம்மை மீள்நிலைப்படுத்தி, புத்தாக்கத்துக்குத் தயார்ப்படுத்தினால், மக்கள் அந்தப் பக்கமாகச் சென்று விடுவர். அதைத் தடுத்து நிறுத்தக் கூடிய எத்தகைய பொறிமுறையும் திருப்திகரமான நடவடிக்கையும் NPP யிடம் இல்லை. தற்காலிக ஆறுதல்கள் வேறு. நிரந்தரத் தீர்வு வேறு. அரசியல் வெற்றி என்பது நிரந்தரத் தீர்வை எட்டுவதிலேயே உள்ளது. தற்காலிக வெற்றிகள் பலவற்றை விடுதலைப் புலிகள் இயக்கம் பெற்றிருந்தது. இறுதி விளைவில் அது தோற்றது. வரலாறு ஒன்றும் எளியதல்ல. அது கடினமான - அர்ப்பணிப்பான பங்களிப்புகளையே எதிர்பார்க்கிறது.


GREEN PARK BEACH HOTEL – PROPERTY FOR SALE

**Property Details:**
**Land Area:**
34 perches
(Hotel building – 22 perches, Car parking – 12 perches)

**Accommodation:** 18 rooms with air conditioning, cable/satellite TV, wireless internet, feather/down pillows, linens, tub, bath sheets, and dressing gowns

**Restaurant:** Seats 100, offering a range of Asian dishes à la carte



**Overview:**
Green Park Beach Hotel is a beachfront property in Trincomalee, offering 18 fully equipped rooms and modern amenities for guests. The hotel is conveniently located:

- 350 metres from St Mary's Cathedral
- 4.4 km from Sober Island
- Close to Maritime and Naval History Museum and Trincomalee reef
- 10 minutes' walk from the town center
- Short drive to Elephant Ridge and Trincomalee train station






This property combines prime location, beachfront access, and a ready-to-operate hotel, making it an attractive investment opportunity

Address: 312 Dyke Street, Trincomalee, Sri Lanka
Contact:+94 76 271 2409 | greenparktco@live.com

# Sai Shree Foods
Pty. Ltd.

## AUSTRALIA - CANADA - INDIA

# REMARKABLE QUALITY AND RELISHING TASTE.




**If you're after the authentic taste of Indian style foods look no further, Sai Shree Foods is the manufacturer of quality Indian Yoghurt, Idli & Dosa mix, Paneer, Shrikhand Kesar Elaichi, Mango Lassi, Punjabi Lassi and much much more. Sai Shree Foods produce a Quality Australian Products in Melbourne facility.**

**We are also distributing Grand snacks/pickles and Mambalam Iyers pickles (Famous South Indian brand)**

**HEAD OFFICE:** Sai Shree Foods Pty. Ltd.
Ph: 03 9706 6211
Unit 17/69-77, Mark Anthony Drive, Dandenong - VIC 3175

**DISTRIBUTORS:** Sai Shree International Pty Ltd
Sydney & Canberra - Mr Bhaskar - 0421 835 554
Products Available - Adelaide, Perth, Brisbane & Darwin



# நேபாளத்தின் ‘Gen Z’ புரட்சி: ராப் பாடகர் கையில் பிரதமர் அரியணை!

● ஐங்கரன் விக்கினேஸ்வரா

தென்னாசிய அரசியலில் ஒரு புதிய மின்னல் அடித்துள்ளது. பல தசாப்தங்களாகப் பாரம்பரியக் கட்சிகளின் இரும்புப்பிடிக்குள் இருந்த நேபாளம், இன்று ஒரு 35 வயது இளைஞனின் கைகளில் தஞ்சமடைந்துள்ளது. புகழ்பெற்ற ‘ராப்’ பாடகரான பாலேந்திர ஷா (Balendra Shah), அந்நாட்டின் புதிய பிரதமராகப் பதவியேற்க உள்ள செய்தி, உலக நாடுகளின் கவனத்தை நேபாளத்தின் பக்கம் திருப்பியுள்ளது.

### சமூக ஊடகத் தடையும் வெடித்த எரிமலையும்

இந்த அதிரடி மாற்றத்திற்குப் பின்னால் ஒரு பெரும் போராட்ட வரலாறு ஒளிந்திருக்கிறது. கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம், Facebook, Instagram, YouTube உள்ளிட்ட 26 சமூக ஊடகத் தளங்களுக்கு நேபாள அரசு அதிரடியாகத் தடை விதித்தது. ஏற்கனவே ஊழல், வேலையில்லாத் திண்டாட்டம் மற்றும் வறுமையால் குமுறிக்கொண்டிருந்த நேபாள இளைஞர்களுக்கு (Gen Z), இந்தத் தடை எரியும் நெருப்பில் ஊற்றிய எண்ணெயாக மாறியது.

#NepoKid (வாரிசு அரசியல்வாதிகள்) என்ற ஹேஷ்டேக் வைரலாகி, மக்களின் கோபத்தை அறுவடை செய்தது. தலைநகர் காத்மண்ட் போர்க்களமானது. நாடாளுமன்றம் தீக்கிரையாக்கப்பட்டது் பிரதமர் இல்லம் முற்றுகையிடப் பட்டது. போராட்டத்தின் உச்சக்கட்ட வன்முறையில் 76 பேர் உயிரிழக்க, அப்போதைய பிரதமர் கே.பி. சர்மா ஒலி தனது பதவியை ராஜினாமா செய்துவிட்டு நாட்டை விட்டு வெளியேற வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார்.



### தேர்தலில் வீசிய ஆர்.எஸ்.பி புயல்

இடைக்கால அரசின் பொறுப்பில் கடந்த மார்ச் 5-ம் திகதி நடைபெற்ற பொதுத்தேர்தலில், இளைஞர்களின் பேரெழுச்சி வாக்குகளாக மாறியது. 2022-ல் தொடங்கப்பட்ட பாலேந்திர ஷாவின் தேசிய சுதந்திரக் கட்சி (RSP), பாரம்பரிய அரசியல் ஜாம்பவான்களைத் தவிடு பொடியாக்கியுள்ளது.

### தேர்தல் களத்தின் முக்கியமான தகவல்கள்:

- 165 தொகுதிகளில் ஆர்.எஸ்.பி கட்சி 125 இடங்களைக் கைப்பற்றி இமாலய வெற்றி பெற்றுள்ளது.
- விகிதாசார முறை இடங்களையும் சேர்த்தால், பாலேந்திர ஷா தலைமையிலான ஆட்சி அமைவது உறுதியாகியுள்ளது.
- முன்னாள் பிரதமர் கே.பி. சர்மா ஒலி, பாலேந்திர ஷாவிடம் 50,000 வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வியடைந் தார். மற்றொரு முன்னாள் பிரதமர் மாதவ் நேபாளும் ஆர்.எஸ்.பி வேட்பாளரிடம் வீழ்ந்தார்.

### பெண்களின் எழுச்சியும் புதிய நம்பிக்கையும்

இந்தத் தேர்தல் மற்றொரு சாதனையையும் படைத்துள் ளது. வெற்றி பெற்ற 14 பெண் வேட்பாளர்களில் 13 பேர் பாலேந்திர ஷாவின் கட்சியைச் சேர்ந்தவர்கள். இது நேபாள அரசியலில் ஏற்பட்டுள்ள நவீனத்துவத்தையும், பாலின சமத்துவத்தையும் பறைசாற்றுகிறது.

### இளமையும் மாற்றமும்

“மாற்றம் எங்கள் தலைமுறையில் தொடங்க வேண்டும்” என்ற முழக்கத்தோடு வீதிக்கு வந்த இளைஞர்கள், இன்று




ஒரு ராப் பாடகரை நாட்டின் தலைவனாக்கியுள்ளனர். 239 ஆண்டு கால மன்னராட்சி 2008-ல் முடிவுக்கு வந்தபோது நேபாளம் கண்ட எதிர்பார்ப்பை விட, இன்று பாலேந்திர ஷாவின் வருகை ஒரு புதிய உத்வேகத்தைத் தந்துள்ளது.

குடும்ப அரசியல், ஊழல் மற்றும் காலாவதியான நிர்வாக முறைக்கு முற்றுப்புள்ளி வைக்க நேபாள மக்கள் வழங்கிய இந்த ஆணை, தென்னாசியாவின் பிற நாடுகளுக்கும் ஒரு பாடமாக அமையலாம். 35 வயதில் பிரதமர் அரியணையில் அமரப்போகும் பாலேந்திர ஷா, நேபாளத்தின் எதிர்காலத்தை எவ்விதம் செதுக்கப்போகிறார் என்பதை உலகம் மூச்சடக்கிப் பார்த்துக் கொண்டிருக்கிறது.

● ஐங்கரன் விக்கினேஸ்வரா



# ஈரானில் அமெரிக்க போர் உத்தி தோல்வியா? திருப்பி அடிக்கும் தெஹ்ரானின் 'யுத்த வியூகம்'!



2026 பெப்ரவரி 28. உலகமே அதிர்ச்சியில் உறைந்த நாள். அமெரிக்காவும் இஸ்ரேலும் இணைந்து ஈரானின் மீது நடத்திய மின்னல் வேகத் தாக்குதலில், அந்நாட்டின் உச்ச தலைவர் அயதுல்லா கொமேனி கொல்லப்பட்டார். ஈராக், லிபியா போன்ற நாடுகளில் தலைமையை அழிப்பதன் மூலம் வெற்றிகரமாக ஆட்சியைக் கவிழ்த்த அமெரிக்கா, ஈரானிலும் அதே பாணியைப் பின்பற்றியது. ஆனால், கணக்குத் தப்பியது. தலைமையை இழந்த பின்பும் ஈரான் காட்டும் பதிலடி, அமெரிக்க போர் உத்தியையே கேள்விக்குறியாக்கியுள்ளது.

### அமெரிக்காவிற்கு சவால் தரும் ஈரான் வியூகம்!

அமெரிக்காவின் போர் முறை என்பது “விரைவான வெற்றி“ (Quick Win). ஆனால், ஈரானோ ஒரு “நீண்ட காலப் போருக்கு” (War of Attrition) தன்னைத் தயார்படுத்தியுள்ளது. எதிரியை நேரடியாகத் தோற்கடிப்பதை விட, அவர்களைத் தொடர்ந்து இரத்தம் சிந்தச் செய்து, பொருளாதார ரீதியாகப் பலவீனப்படுத்துவதே ஈரானின் திட்டம்.

இதற்காக ஈரான் கையில் எடுத்திருக்கும் ஆயுதம் “மொசைக்” பாதுகாப்பு கோட்பாடு. இது ஒரு பரவலாக்கப்பட்ட இராணுவ அமைப்பு. அதாவது, தலைநகர் தெஹ்ரானில் உள்ள தலைமை அழிந்தாலும், நாட்டின் 31 மாகாணங்களில் உள்ள தன்னாட்சிப் படைகள் தானாகவே இயங்கும். ஒவ்வொரு படைப்பிரிவிடமும் தனித்தனியே ஏவுகணைகள், ட்ரோன்கள் மற்றும் முடிவெடுக்கும் அதிகாரம் உள்ளது. “தலைவன் வீழ்ந்தால் படை சிதறும்” என்ற அமெரிக்காவின் கணக்கை இந்த “பரவலாக்கப்பட்ட போர்முறை” தவிடுபொடியாக்கியுள்ளது.

### கார்க் தீவை தாக்கி அமெரிக்கா கைப்பற்றுமா?

வளைகுடாப் பிராந்தியத்தில் இப்போது பதற்றத்தின் உச்சப்புள்ளி “கார்க் தீவு” தான் (Kharg Island). வெறும் 20 சதுர கிலோமீற்றர் பரப்பளவு கொண்ட இந்தப் பவளத் தீவுதான் ஈரானின் பொருளாதார இதயம். ஈரானின் மொத்த எண்ணெய் ஏற்றுமதியில் 90 சதவீதத்துக்கும் மேலான எண்ணெய் விநியோகம் இந்த ஒரு தீவு வழியாகவே நடைபெறுகிறது.

சமீபத்தில் அமெரிக்கா இந்தத்தீவின் மீது நடத்திய தாக்குதல் வளைகுடா யுத்தத்தை அடுத்த கட்டத்துக்கு நகர்த்தியுள்ளது. அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் தலைமையிலான நிர்வாகம், ஈரானின் நிதி ஆதாரத்தை முழுமையாக முடக்க இந்தத்தீவை இராணுவ ரீதியாகக் கைப்பற்றத் திட்டமிட்டுள்ளதாகக் கசிந்துள்ள தகவல்கள் உலக நாடுகளை அச்சத்தில் ஆழ்த்தியுள்ளன. அமெரிக்காவின் 82ஆவது வான்படைப் பிரிவு இந்தத்தீவை ஆக்கிரமிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.




### ஈரானின் எண்ணெய் ஏற்றுமதி முடங்குமா?

கார்க் தீவு முடக்கப்பட்டால் ஈரானின் வருமானம் பாதியாகக் குறையும். ஆனால், இதற்கு ஈரான் வைத்துள்ள பதிலடி மிகவும் பயங்கரமானது. “கார்க் தீவு தாக்கப்பட்டால், மத்திய கிழக்கில் உள்ள அமெரிக்காவுடன் தொடர்புடைய அனைத்து எரிசக்தி கட்டமைப்புகளையும் சாம்பலாக்குவோம்” என ஈரான் எச்சரித்துள்ளது.

உலகளாவிய எண்ணெய் வர்த்தகத்தில் ஐந்தில் ஒரு பங்கு செல்லும் “ஹோர்முஸ் நீரிணை“ (Strait of Hormuz) தற்போது போர் மேகங்களால் கப்பல் போக்குவரத்து இன்றி வெறிச்சோடிக் கிடக்கிறது. இதனால் சர்வதேச சந்தையில் எண்ணெய் விலை தாறுமாறாக உயர்ந்து, உலகப் பொருளாதாரமே ஒரு மந்தநிலையை நோக்கிச் செல்லும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இதனைச் சமாளிக்க அமெரிக்கா தனது அவசரகால எண்ணெய் இருப்பை (Strategic Petroleum Reserve) சந்தைக்கு விட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

### அமெரிக்க இஸ்ரேல் ஆக்கிரமிப்பு தோல்வியா?

ஆரம்பத்தில் இது ஒரு எளிதான வெற்றி என்று கருதப்பட்டாலும், தற்போது அமெரிக்காவிற்கு இது “விலை உயர்ந்த“ போராக மாறியுள்ளது. ஈரான் ஏவும் மலிவு விலை ட்ரோன்களையும் ஏவுகணைகளையும் தடுக்க, அமெரிக்கா பல மில்லியன் டொலர் மதிப்புள்ள “பேட்ரியாட்” மற்றும் “தாட்” ஏவுகணைகளைப் பயன்படுத்த வேண்டியுள்ளது.

“எதிரி திணறடிக்கப்படும் வரை அவர்களை இரத்தம் சிந்தச் செய்வதே எங்கள் நோக்கம்” என்ற ஈரானின் பிடிவாதம், அமெரிக்கா மற்றும் இஸ்ரேலை அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளியுள்ளது. வளைகுடா நாடுகள் இந்தப் போர் ஒரு பிராந்தியப் போராக மாறுவதைத் தடுக்க அமைதிப் பேச்சுவார்த்தைக்கு அழைப்பு விடுத்து வருகின்றன.

ஈரான் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கலாம், ஆனால் அதன் இராணுவக் கட்டமைப்பு இன்னும் சிதையவில்லை. “யுத்தம் எப்போது முடிய வேண்டும் என்பதை ஆக்கிரமிப்பாளர்கள் தீர்மானிக்க முடியாது. அது எங்கள் கைகளிலேயே உள்ளது” என்ற ஈரானின் முழக்கம், நவீன கால போர் வரலாற்றில் அமெரிக்காவுக்கு ஒரு மிகப்பெரிய சவாலாக உருவெடுத்துள்ளது.



எதிரொலி ஆஸ்திரேலியா ETHIROLI



# கருமுகில் கலையும் நிலவு



நியூயோர்க் நகரம் நிமிர்ந்து நின்றது. கட்டடக் காடு தான் எங்கு பார்த்தாலும் அழகழகான வர்ணங்களில் கண்ணாடி ஓவியங்களாகக் காட்சி கொடுத்துக்கொண்டிருந்தது.

இயந்திரமயமான ஓட்டத்திலும் நிம்மதியாக தங்கள் தங்கள் வேலைகளைக் கவனித்துக் கொண்டிருந்தார்கள்.

மாலை இருள் வானத்தை மூடிக் கொண்டிருப்பது தெரியாமல் மின் விளக்குகள் இருளைத் துரத்திக்கொண்டிருக்க நேரத்தைப் பார்த்த மதன் “ என்ன கீழே போய் மது அருந்தி விட்டு வருவமே? “ என்றான்.

“தேசிய இனங்களும் ஒருமைப்பாடும்” என்ற தலைப்பிலான மகாநாட்டுக் கருத்தரங்கில் பங்கு கொள்ள நான் அவுஸ்ரேலியாவில் இருந்தும் மதன் ராஜ் சிங்கப்பூரில் இருந்தும் ஆனந்தி கதிரேசன் இலங்கையில் இருந்தும் இன்னும் சிலர் வேறு நாடுகளில் இருந்தும் வந்திருந்தார்கள்.

மதன் ஒரு வித்தியாசமான பேர்வழி. அவன் வந்ததும் என்னுடன் தான் ஒட்டிக் கொண்டான். தனது பாட்டனார் இலங்கையில் காங்கேசன்துறையைச் சேர்ந்தவர் என்றும், தாங்கள் சிங்கப்பூரினர் என்றும் எப்போதும் தன் புகழ் பாடியே என்னைக் கவர்ந்தான்.

நானும் மதனும் ஹோட்டலுக்கு கீழேயுள்ள மதுபான விடுதியில் மது அருந்துவோம். அப்படியே வெலிங்டன் சாலையில் நடந்து காற்று வாங்குவோம். இரண்டு போத்தல் பியர் குடித்தாலே என்னால் எழுந்து நடக்க முடியாது. மதன் ஒரு முழு ஜொனிவோக்கரை தனிய விழுங்கி விட்டுக் கம்பீரமாக நடந்து வருவான்.

நான்கு பியர் போத்தலை பந்தயம் கட்டி குடித்து விட்டேன். நான் நிறையக் குடித்தால் ஏதாவது மனதை உறுத்தும் கவிதை சொல்வேன். அதற்காகவே மதன் என்னைக் குடிக்க வைப்பான் அன்று நிறையக் குடித்திருந்தேன்.

“முன்னர் நினைத்ததும் பட்டணம் போகலாம். முற்றவெளியில் சற்று அமரலாம். பத்து மணிவரை இலக்கியம் பேசலாம். பண்ணைக் கடற்கரைப் பக்கம் நடக்கலாம்”

என்று சிறு கவிதை அடியினை வாசித்தேன்.

“இது கவிஞர் காசி ஆனந்தன் எழுதிய கவிதை தானே. எங்கே இன்னுமொருதரம் சொல்லு” என்றான் மதன்.

“இல்லை இது கவிஞர் புதுவை இரத்தினதுரையின் கவிதை” என்று சொல்லிக் கொண்டு இருக்க ஒரு அழகான இளைஞன் எமது மேசையின் அருகில் வந்து அமர அனுமதி கேட்டான். தள்ளாத வெறியில் மதன் என்னைப் பார்க்க நான் அவன் முகத்தைப் பார்க்க,

“ஐயாம் விக்னேஷ்” என்று தன் பெயரைச் சொல்லி கையை நீட்டினான். நாமிருவரும் எதுவும் பேசாமல் கை கொடுத்தோம்.

அவனுடைய கையில் அரைவாசி குடித்த ஏதோ ஒரு உயர்தர குடிவகை போத்தல் கையில் இருந்தது. ஒரு பெண் ஓடி வந்து அவன் கையில் இருக்கும் போத்தலை பறிக்க எத்தனிக்கிறாள்.

“ப்ளீஸ் லீவ் மீ எலோன் . இவர்களுடன் நான் பேச வேண்டும்”

“இல்லை விக்னேஷ் நீ நிறையக் குடித்திருக்கிறாய். மேடம் திட்டுவார்கள்.”

அவன் அவளை உதறித் தள்ளிக் கொண்டு. “நான் உங்களை இன்னொரு நாள் சந்திக்கிறேன்” என்று சொல்லிக் கொண்டு போனான்.

மதன் வாயில் கையை வைத்துக் கொண்டு ”என்ன மச்சான் ஒரு தமிழ் பொடியன் அழிந்து போகிறானே”என்றான்

என்னால் இரவு முழுவதும் உறங்க முடியவில்லை. விக்னேஷின் முகமும் அவனது தோற்றமும் தான் என் கண்முன்னே நிழலாடின. அவனுடைய மனதுக்குள் ஒரு ஆழமான சோகம் அடிப்பிடித்துக் கிடப்பது தெளிவாகத் தெரிந்தது.

மதன் என்னிடம் திரும்பத் திரும்ப எதை எதையோ எல்லாம் கேள்விகளாகக் கேட்டான்.

மறு நாள் காலை வேறு ஒரு மண்டபத்தில் கருத்தரங்கு நடப்பதாக அறிவித்து எம்மை ஏற்றிப்போக பஸ் வந்ததும் அதில் ஏறிய மதன் இரவு நடந்த சம்பவத்தை ஒன்று விடாமல் சொல்லி முடித்தான்.

மகாநாடு முடிய இன்னமும் மூன்று நாட்கள் இருந்தன.

மதன் இப்போது குடிப்பதை விட விக்னேஷை சந்திக்கவே பாருக்கு போக அவசரப்படுவான். நானும் அந்த விக்னேஷ் வருவானா என்று தேடினேன். இன்று வரமாட்டானோ என்று எண்ணிய போது ஒரு பட்டாளமாக இளைஞர்கள், யுவதிகளாக வந்தார்கள். பலர் கைகளில் இசைக் கருவிகள் இருந்தன. அதில் விக்னேஷ் ஒரு கிற்றாருடன் வந்து அமர்ந்தான். விக்னேஷ் எம்மைப் பார்த்ததும் அருகில் வந்தான்.

நிதானமாகவும் உள்ளடக்கத்துடனும் எம்மோடு பேசினான்.

மதன் அன்று நிறையக் குடித்து விட்டதால் அவன் அறைக்கு உடனே போய்விட்டான். நானும் விக்னேஸும் நீண்ட நேரம் பேசிக்கொண்டிருதோம். அவன் கிற்றாரை எடுத்து நரம்புகளை மீட்டினான், அதில் ஏதோ தமிழ்ப் பாடல் வரிகளை நினைவுபடுத்தினாலும் என்னால் உடனே ஞாபகப்படுத்த முடியவில்லை.

விக்னேஷ் இசையில் ஆழ்ந்திருக்க நானும் அவன் இசையில் நனைந்திருக்க ஒரு கூட்டமும் அங்கே நிறைந்திருக்க, கார் வந்து நின்றது. அவன் எழுந்து போனான். தாய் போல் இருக்கும் பெண்மணியைப் பார்த்து நீங்கள் ஏன் வந்தனீர்களென்பது போல் பார்த்துக் கோபமாகக் கேட்டான். உடனே நாளை பார்க்கலாம் என்று சொல்லிவிட்டுப் போனான்.

இரண்டு நாளாக எமது மகாநாடு இரவு வரையும் நீடித்ததால் பாருக்கும் போக முடியவில்லை. விக்னேஷை யும் பார்க்க முடியவில்லை.

மகாநாடு முடிய முன்னமே மதன்ராஜ் சிங்கப்பூருக்கு சென்று விட்டான். எனக்கு தனியே போய்க் குடிக்கும் பழக்கம் இல்லை. இருந்தாலும் விக்னேஷைப் பார்க்கலாம் என்று போனேன், என்ன அதிசயம் அவனும் எனக்காகக் காவல் இருந்தான். நான் போனதும் என்னை வரவேற்று மேசை அருகில் இருத்தியதும் வெறும் கொக்கோ கோலாவுக்கு ஓடர் கொடுத்தான்.

“நீங்கள் குடிக்க..?”

“இல்லை எனக்கும் தலையிடிக்கிறமாதிரி...கோக்கே போதும்.”

“அப்படியா வாருங்கள் கொஞ்சம் நடந்து போவோம் பக்கத்தில் ’ஆப்ரஹாம் பார்க் ‘ இருக்கிறது காற்று வாங்க தலையிடி சுகமாயிருக்குமே...

அவன் சொன்னமாதிரி காற்று வாங்கிக் கொண்டு நடந்த போது தலையிடி குறைவது தெரிந்தது. அங்கே அந்தப் பார்க்கில் ஒருவன் கிற்றார் ஒன்றை வைத்து அமைதியாக இசைத்துக்கொண்டிருந்தான்.

விக்னேஷ் அவன் அருகில் போய் சில சில்லைறைகளைப் போட்டு விட்டு அவனுடைய கிற்றாரை வாங்கி நரம்புகளை மீட்டினான்.”ஓ தங்யூ ஹைய்ஸ் “ என்றான் அந்த இசைக் கருவிக்காரன்.

“விக்னேஷ் உனக்கு இசை என்றால் விருப்பமா?

“இசை தான் என் கனவு , வாழ்க்கை எல்லாமே இசை என்று தான் இருந்தேன். ஆனால் என் வாழ்க்கையே இசையால் தொலைந்து இப்போ இசையையும் தொலைத்துக் கொண்டிருக்கிறேன்”

விக்னேஸுடைய வார்த்தைகளில் ஏதோ ஒரு ஏக்கமான நெருப்பு எரிந்து கொண்டிருப்பது எனக்கு விளங்கியது.

“நேற்று காரில் வந்து உங்களை ஏற்றியது”?

“ஓ அதுவா என்னுடைய அம்மா , இப்போது அம்மாவுடன் தான் இருக்கிறேன்.”

“ஓ கல்யாணம் ஆகிவிட்டதா.

“கல்யாணம்...?அந்த நரகத்தைச் சுமந்ததால் தானே இப்போது இறக்கி வைக்க முடியாமலும் சுமக்க முடியாமலும் தவிக்கிறேன்”

“ஓ அப்படியா அதையேன் நரகம் என்று சொல்கிறீர்கள் ?“ நான் கேட்டேன்.

“நீங்க நல்லாப் பேசுகிறீர்கள் உங்களோடு பேசும் போது மனம் திறந்து ஏதோ சுமை குறைகிறமாதிரி இருக்கு எனக்கு”

“சொல்லுங்க உங்கள் கல்யாணம் காதல் கல்யாணம் தானே?”

“நோ.. நோ.. அது தான் இல்லை. அம்மாவின் அண்ணன் மகள் தான் நிர்மலா. அவளுடைய தந்தையார் விமானக் குண்டுத் தாக்குதலில் இறந்து விட்டார். மாமா இறந்த பின்பு அம்மா தான் காசு அனுப்பி அவர்களுக்கு உதவி செய்து கொண்டிருந்தார். நிர்மலா விஞ்ஞானப் பட்டதாரியாக பல்கலைக்கழகம் முடித்து வந்த போது எனக்கு வலுக்கட்டாயமாக அம்மா கல்யாணம் செய்து வைத்தார். அவளும் வந்து ஒரு வருடம் நன்றாக இருந்தாள்”

“அப்படி என்றால் ஏன் பிரிவு?” நான் தான் கேட்டேன்.

“எனது இசைக்குழு நண்பர்கள் நண்பிகள் வீடு தேடி வருவார்கள். சில வேளை இரவு முழுவதும் பாடிக் கொண்டிருப்போம்.”

“இதில் பெண் நண்பர்களும் இருக்கிறார்களா.”?

நான் தொடர்ந்து கேட்டேன்.

“பெண்கள் தான் நிறைய இருந்தார்கள்”

“ஓ அப்படியா?”

“ஆனால் நான் அவர்களோடு எந்த தப்பான வழியிலையும் நடக்கவில்லை. அவர்களும் மிகவும் நாகரிகமானவர்கள். இதை நிர்மலாவுக்கு பல முறை எடுத்துச் சொல்லி இருக்கிறேன் அவள் ஒரு விஞ்ஞானப் பட்டதாரி.இதை எல்லாம் புரிந்து கொள்வாள் என்று நம்பினேன். இலங்கையில் வளர்ந்த பிள்ளை போகப் போக புரிந்து கொள்வாள். நீ கொஞ்சம் அனுசரிச்சுப் போகவேணும் என்று அம்மா என்னையே பொறுத்துப் போகச் சொல்வார்.ஆனால் எந்தத் தவறும் செய்யாத எனக்கு இவ்வளவு தண்டனையை தந்து என்னிடம் இருந்து விலகி இருக்கிறாள். இப்போது என் கூட இருந்த நண்பர்களும் என்னை விட்டு விலகி விட்டார்கள்.

இசை..... இசை..... என்று இசையில் பெரிய இடத்தை பிடிக்க முடியும் என்ற நம்பிக்கை இருக்கும் போது அம்மா கல்யாணம் செய்து வைத்தார். அதன் பின்பும் எவ்வளவோ முயற்சி செய்தேன். இரண்டு தோணியில் போனாலும் மனம் எப்போதும் ஒரு பாதையாக இருக்க வேணுமாம். அப்போது தான் நினைக்கும் காரியம் கைகூடுமாம். இங்கு பாருங்கள் எவ்வளவு பாடல்களை நானே இசை அமைத்திருக்கிறேன்”

அவன் என்னை நம்பி தனது மனக்குறை எல்லாவற்றையும் திறந்து கொட்டினான்.

அவனுடைய இசைத் தட்டுக்கள் ஒவ்வொன்றையும் பார்த்தேன், இசைகளையும் கேட்டேன். சில பழைய பாடல்களுக்கு தனது புதிய இசையைக் கலந்திருந்தான்.

அவனுடைய பொழுது போக்குகள் பூ மரம் வளர்த்தல், மீன் தொட்டி வைத்து மீன் வளர்த்தல்,பறவை வளர்ப்பு என்று இயற்கையோடு இருக்கிறான்.

“உங்கட பக்கத்தில் உங்களுக்குத் தெரியாமல் ஏதாவது தவறு நிகழ்ந்திருக்கலாம் அல்லவா? ஆராய்ந்தீர்களா ?” என்றேன்.

“ஊருக்குப் போகவேண்டும் என்று ஒரு வருட முடிவில் கேட்டாள். அப்போது இலங்கை போக வேண்டாம் என்று அமெரிக்க அரசாங்கம் அறிவித்திருந்தது. அதனால் அவள் எவ்வளவோ கேட்ட போதும் நான் தடுத்தேன். இது தான் நான் செய்த தவறு.”

சொல்லி விட்டு குலுங்கிக் குலுங்கி அழுதான்

மகாநாடு முடிந்ததும் நான் சில நாட்கள் நியூயோர்க்கில் நின்றுகொண்டிருந்தேன். அந்த வேளையில் விக்னேஷ் போன் எடுத்து நிர்மலா நியூயோர்க்கில் இருப்பதாகச் சொல்லி விலாசமும் தந்தான்.

(13ஆம் பக்கம் பார்க்க)

# கருமுகில் கலையும் நிலவு

(12பக்கத் தொடர்ச்சி)

எனக்குச் சங்கடமாக இருந்தாலும், விக்னேஷ் மீண்டும் மீண்டும் கேட்டுக் கொண்டதற்காக, 'நிர்மலாவின் அறைக்கு போய் அவளையும் ஒருதரம் சந்தித்தால் என்ன...' என் மனம் சொன்னது.

நிர்மலாவுடன் தொலைபேசியில் பேசிய போது அவள் தயங்கினாள்.

பலமுறை மறுத்தாள். சரிவராது என்றே சொல்லிக் கொண்டு அழ எத்தனித்தாள்.

யோசித்துச் சொல்வதாக சொல்லி போனை வைத்து விட்டாள்.

சில நிமிடத்தில் தானே அழைத்து வந்து சந்திக்கும்படி விலாசம் அனுப்பினாள்.

நிர்மலாவுடன் நிறையப் பேசினேன். அவள் திரும்பத் திரும்ப விக்னேஷின் தவறுகளைசொல்லிக் கொண்டிருந்தாள். அவளுடைய பேச்சின் நடுவே ஒரு தொலைபேசி வந்தது. பின்பு பேசுவதாக தொலைபேசியைத் துண்டித்தாள்.

“அப்படி என்றால் விக்னேஷிடம் இருந்து நிரந்தரமாக விலகப் போகிறீர்களா? மீண்டும் கல்யாணம் செய்யப் போகிறீர்களா.? ”என்று கேள்விகளாகவே கேட்டேன். அவளிடம் இருந்து சரியான பதில் வரவில்லை. எனக்கு விளங்கியது இது தான்.

'விக்னேஸுக்கு நல்ல படிப்பும் இல்லை. ஒரு நிரந்தரத் தொழிலும் இல்லை. அவனுக்குத் தெரிந்ததெல்லாம் இசை.. இசை..!ஆனால் அவன் முயன்றால் நல்ல கல்வியை தொடரமுடியும் நல்ல வேலைக்கும் போக முடியும் அதோடு இசையையும் கவனிக்க முடியும்'

அவள் அவனைப் பற்றி சொன்னவை அத்தனையும் உண்மை. இன்னமும் நம்பிக்கை வைத்திருக்கிறாள் என்பது புரிந்தது. ஆனால்...?

விக்னேஸுடன் வாக்குவாதப்பட்டு விட்டாள். அதனால் இந்த நிலையில் இருந்து மாறி அவனுடன் பரஸ்பரம் கதைக்கவும் முடியவில்லை, விட்டுக் கொடுக்கவும் முடியவில்லை. தானே தன்னுடைய அழகிய வாழ்வுக்கு இருள் போர்த்துக் கொண்டாள் நிர்மலா. எமது நாட்டில் மட்டுமில்லை புலம்பெயர்ந்த தேசத்திலும் பெண்களுக்கு நடக்கும் கொடுமைகள் கோடி. நிறையக் கொடுமைகள் குடும்பத்துக்குள் நடப்பதால் வெளியே சொல்ல முடியாமல் கொடுமையெனும் கருமுகில்களைச் சுமந்து சுமையோடு வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள் பெண்கள்.

நூற்றுக்கு ஒரு வீதமான பெண்கள் தான் கருமுகில் தாண்டும் நிலவுகளாக போராடி வெளியே வருகிறார்கள்.

ஆணும் பெண்ணும் சேர்ந்து விட்டுக் கொடுத்து தவறை உணர்த்தி, தவறை உணர்ந்து திருத்தி திருந்தி வாழும் வாழ்க்கை தான் இன்புற்று இருக்கலாம். என்னையோ அல்லது வேறு யாரையுமோ உங்கள் குடும்ப பிரச்சினைக்கு நடுவராக்காமல், நீங்களே நடுவராக இருந்து பேசுங்கள்.

நிர்மலா விக்னேஷை சந்திக்க விரும்பினாள். விக்னேஷ் முதலில் மறுத்தான்

“அவள் வரமாட்டாள்... அவள் ஒரு முடிவை எடுத்தாள் என்றாள் மாறமாட்டாள் அதனால் நீங்கள் செய்யும் முயற்சி வீணானது” என்றான்

நான் முயற்சி செய்து அவளையும் விக்னேஷையும் சந்தித்து பேச இருவரையும் ஒரு இடத்துக்கு அழைத்தேன். இருவரும் ஒருவரை ஒருவரின் குற்றம் குறைகளை சொல்லிக் கொண்டாலும் கடைசியில் சந்திக்கச் சம்மதித்தனர்

இருவரையும் மேர்லிங் கடற்கரையில் சந்திக்க ஏற்பாடு செய்து விட்டு நான் நடந்து கொண்டிருந்தேன்.

முதலில் இருவரும் மௌனமாகவே நின்றிருந்தனர். தூரம் போனதும் திரும்பிப் பார்க்கிறேன். விக்னேஷ் கடற்ரை மணலில் குந்தி இருந்து கொண்டு தனது கிற்றாரில் ஓர் அமைதியான இசையை மீட்டிக் கொண்டிருந்தான். அந்த இசையை துல்லியமாக என் காதுகளுக்கு கொண்டு வந்து சேர்த்தது இளம் தென்றல் காற்று. நிர்மலா தலையைக் குனிந்து தரையைப் பார்த்து தொங்கப் போட்டுக்கொண்டு மணலில் எதையோ தேடினாள்.

சில நிமிடங்கள் கழிந்து நிர்மலா எழுந்து அவனை தன்னோடு அணைத்து அவன் தலையை வருடினாள்

இந்த நிலா, விக்னேஷ் என்ற வான வீதியில் நிரந்தரமாக ஒளிரும் என்ற நம்பிக்கையில் நான் நடக்கிறேன்.

அந்தக் கடற்கரை வானில் சூழ்ந்திருந்த மாலைப்பொழுதில் நிலவில் படர்ந்திருந்த சில கரு மேகம் கொஞ்சம் கொஞ்சமாக விலகி நிலவு பூரணச்சந்திரனாக ஒளிர்ந்து கொண்டிருந்தது.

# Royal Commissionஇல் இருந்து வெளியேறினார் ASIO முன்னாள் தலைவர்!

ஆஸ்திரேலிய உளவுத்துறை அமைப்பின் (ASIO) முன்னாள் தலைவர் டென்னிஸ் ரிச்சர்ட்சன், சிட்னியில் நடந்த பயங்கரவாதத் தாக்குதலுக்குப் பிறகு அமைக்கப்பட்ட அரச ஆணையத்தின் (Royal Commission) ஆலோசகர் பதவியிலிருந்து விலகியுள்ளார்.

நாட்டின் பாதுகாப்பு மற்றும் உளவு அமைப்புகளின் செயற்பாடுகளை ஆய்வு செய்வதற்காக முதலில் இவரைப் பிரதமர் நியமித்த போதிலும், பின்னர் அந்தப் பணி ஒரு விரிவான விசாரணைக் குழுவுடன் இணைக்கப்பட்டது.

ரிச்சர்ட்சனின் வெளியேற்றத்திற்கான காரணம் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்படவில்லை, இருப்பினும் ஆணையத்தின் தலைவர் அவரது பங்களிப்பிற்குத் தனது



நன்றியைத் தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலியாவின் மிக முக்கியமான அரசு அதிகாரிகளில் ஒருவராகக் கருதப்படும் இவர், தூதராகவும் பாதுகாப்புத்துறைச் செயலராகவும் பணியாற்றிய அனுபவம் கொண்டவர். இவரது குழுவைச் சேர்ந்த மற்ற உறுப்பினர்கள் இடைக்கால அறிக்கை முடியும் வரை ஆணையத்தில் தொடர்ந்து பணியாற்றுவார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மாற்றங்களுக்கு இடையிலும், பயங்கரவாத அச்சுறுத்தல்களைத் தடுப்பதற்கான தனது சுயேச்சையான விசாரணையை ஆணையம் தொடர்ந்து முன்னெடுக்கும்.

# நெஷனல்ஸ் கட்சிக்கு புதிய தலைவர்



நெஷனல்ஸ் கட்சியின் தலைவராக இருந்த டேவிட் லிட்டில்பிரவுட் திடீரென பதவி விலகியதைத் தொடர்ந்து, குயின்ஸ்லாந்து செனட்டர் Matt Canavan புதிய தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

உட்கட்சித் தேர்தலில் பிரிட்ஜெட் மெக்கென்சி மற்றும் கெவின் ஹோகன் ஆகியோரைத் தோற்கடித்து அவர் இந்த வெற்றியைப் பெற்றுள்ளார்.

இவருடன் இணைந்து விக்டோரியா மாநிலத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் டேரன் செஸ்டர் துணைத் தலைவராகப் பொறுப்பேற்றுள்ளார்.

முந்தைய தலைவர் தனக்கு போதிய உடல் ஆற்றல் இல்லாத காரணத்தால் விலகிய நிலையில், கட்சிக்குத் தற்போது வலிமையான தலைமை கிடைத்துள்ளதாக கட்சியின் முக்கிய நிர்வாகிகள் கருதுகின்றனர்.

வரும் தேர்தல்களை எதிர்கொள்ளும் வகையில் கட்சியை மீண்டும் வலுப்படுத்துவதே புதிய தலைமையின் முதன்மை நோக்கமாக இருக்கும். கட்சி விதிகளின்படி இந்தத் தேர்தலில் பதிவான வாக்குகளின் எண்ணிக்கை ரகசியமாக வைக்கப்பட்டுள்ளது.

# பாதுகாப்பு உறவை வலுப்படுத்த ஆஸி., கனடா இணக்கம்!

ஆஸ்திரேலியா மற்றும் கனடாவுக்கிடையில் பாதுகாப்பு மற்றும் எரிசக்தி உறவுகளை வலுப்படுத்தும் புதிய ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன.

கனடா பிரதமர் மார்க் கார்னி ஆஸ்திரேலியாவுக்கு பயணம் மேற்கொண்டிருந்தார். அவர் மார்ச் 5ஆம் திகதி கூட்டாட்சி நாடாளுமன்றத்தில் உரையாற்றினார்.

அதன் பின்னர் இரு நாடுகளின் பிரதமர்கள் இணைந்து கூட்டு செய்தியாளர் சந்திப்பை நடத்தினர்.

ஈரான் மீதான போர் தீவிரமடைந்து வரும் சூழலில், தற்போதைய நிலையில் போர்நிறுத்தம் செய்வது சாத்திய



மற்றது என்றும், ஈரானின் அணுஆயுத அச்சுறுத்தல் முழுமையாக அகற்றப்பட வேண்டும் என்றும் இரு தலைவர்களும் வலியுறுத்தினர்.

உலகளாவிய மோதல்கள் அதிகரித்து வருவதால், ஆஸ்திரேலியாவும் கனடாவும் மற்ற நடுத்தர நாடுகளுடன் இணைந்து புதிய சர்வதேச விதிகளை உருவாக்க வேண்டியது அவசியம் என்று கார்னி தனது உரையில் குறிப்பிட்டார்.

அணுசக்தி பரவலைத் தடுத்தல் மற்றும் பயங்கரவாதத்தை ஒடுக்குதல் போன்ற இலக்குகள் எட்டப்பட்ட பின்னரே அமைதிப் பேச்சுவார்த்தை தொடங்கும் என்பதை அவர் சுட்டிக் காட்டினார்.

மேலும், முக்கியமான தாதுக்கள் மற்றும் விண்வெளி ஆராய்ச்சி தொடர்பான துறைகளில் ஒத்துழைப்பை அதிகரிக்க இரு நாடுகளும் இணக்கம் தெரிவித்துள்ளன.

# மத்திய கிழக்கு போரால் ஆட்டம் காணும் ஆஸி. பொருளாதாரம்!

மத்திய கிழக்கில் நிலவும் போர் பதற்றத்தால் ஆஸ்திரேலியாவில் விலைவாசி உயர்வு மற்றும் பொருளாதார நிச்சயமற்ற நிலை ஏற்படக்கூடும் என்று பொருளாளர் ஜிம் சால்மர்ஸ் எச்சரித்துள்ளார்.

குறிப்பாக, எரிசக்தி விநியோகத்தில் ஏற்படும் பாதிப்புகள் பணவீக்கத்தை அதிகரிக்கச் செய்யும் என்பதால், வரவிருக்கும் கூட்டாட்சி வரவு செலவுத் திட்டத்தில் இதற்கான தற்காப்பு நடவடிக்கைகள் கவனத்தில் கொள்ளப்படும்.

எரிபொருள் நிறுவனங்கள் விலையை அநியாயமாக உயர்த்துவதைத் தடுக்க கண்காணிப்பு குழுக்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது எனவும் அவர் கூறினார்.


அதே சமயம், உலகளாவிய பொருளாதார மந்தநிலைக்கு மத்தியில் நாட்டின் வளர்ச்சியைத் தக்கவைக்க அரசு முன்னெச்சரிக்கையுடன் செயல்படவில்லை என்று எதிர்க்கட்சிகள் விமர்சிக்கின்றன.

இந்த நெருக்கடியான சூழலில், வட்டி விகித மாற்றங்கள் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் குறித்து ஆஸ்திரேலிய மத்திய வங்கி மற்றும் அரசு தீவிரமாக ஆலோசித்து வருகின்றன.

ஒரு நீடித்த போர் உலகளாவிய வர்த்தகத்தை பாதிக்கும் என்பதால் ஆஸ்திரேலியா தற்போது மிகவும் விழிப்புடன் நிலைமையை கவனித்து வருகிறது.


SST
SPICES
& Things
Indian | Sri lankan | South Asian
Groceries & Take away
At SST Spices & Things, we pride ourselves on delivering top-notch customer service and offering high-quality food and groceries. Whether you're picking up your favorite spices, fresh produce, or delicious takeaways, we've got you covered!
7 days
10 am to 8 pm
SST Spices
& Things
Where quality meets community
Location:
79 McIntyre Rd,
Sunshine North VIC 3020
Contact:
03 9417 2517
Email:
sstspicesnthings@gmail.com


XD
X Dream Jewellery
Manufacturers & Importers of Modern Styles in 22K (916) Solid Gold
Where Tradition Meets Timeless Luxury
Discover gold jewellery, designed to sparkle for generations.
22K & 24K Pure Gold – Exquisite Designs, Unmatched Craftsmanship
Cash When You Need It
Trust You Can Count On
Bring your gold Top Dollar Paid
Safe & Secure • Same-Day Service
02 8677 4490
xdreamjewellery.com.au
08xdream@gmail.com
8 Aurelia St,
Toongabbie NSW 2146



# எதிர்ப்பக்கம்

**'இப்ப எல்லாம் யார் சார் சாதி பார்க்கிறா ?'**

இந்தக் கேள்வியை மறுபடி மறுபடி நாம் வேலை பார்க்கும் அலுவலகங்களிலும், நாம் சந்திக்கும் ஒவ்வொரு நபர்களின் உரையாடல்களில் ஏதாவதொரு சந்தர்ப்பங்களில் கண்டிப்பாக நாம் இதனை கடந்து வந்திருப்போம். அப்பொழுதெல்லாம் நான் பொதுவாக ஒரு சிறு புன்னகையுடன் கடந்து விடுவேன்.

ஏனென்றால் சாதி என்பது காற்றைப் போல் நமது அமைப்பின் அனைத்து அடுக்குகளிலும் நீக்கமற எல்லா இடங்களிலும் கண்ணுக்கு தெரிந்தே நிறைந்திருக்கிறது. பல பேர் அதை சுவாசம் போன்று பயன்படுத்துகிறார்கள். சில பேர் தான் தங்களுக்கு தெரிந்தும் தெரியாமலும் இருக்கிறார்கள் அல்லது நடிக்கிறார்கள்.

இடைப்பட்ட சாதியினருக்கு ஒரு வசதி . அவர்கள் சாதியக் கொடுமை தெரியாமலேயே வளர்ந்து விடலாம். ஆனால் சாதி ஏற்றத்தாழ்வு என்ன என்பதை கண்டிப்பாக நமது சமூகம் காட்டிவிடும். இங்கே புலம்பெயர்ந்த நாட்டில் கூட நான் இந்த ஏற்றத்தாழ்வினை நேரடியாக அனுபவித்த போது தான் நெருப்பென்றால் சுடும் என்பது தெரிந்தது.

இன்று பட்டிமன்ற பேச்சாளர் ராஜா அவர்களை போட்டு பிரித்து மேய்ந்து கொண்டிருப்பதில் யாராவது ஒருவர் உண்மையாக நான் சாதியே பார்த்தது கிடையாது என்று சொல்லட்டும். சொல்லவே முடியாது.

இங்கே வேட்பாளர் தேர்வில் நீங்கள் என்ன சமூகம் என்று கேட்டார்கள் என்று பகிரங்கமாக சொல்ல முடிகிறது . ராஜா உங்கள் சாதி என்ன என்று கேட்டது தவறில்லை தானே ?

இங்கே நிறுத்தப்படும் ஒவ்வொரு வேட்பாளரும் அந்தத் தொகுதியில் வாழும் பெரும்பான்மை சமூகத்தை சார்ந்தவராக தானே இருக்கிறார்? எத்தனை தாழ்த்தப்பட்ட சமூகத்தினர் பொதுத் தொகுதியில் போட்டியிடுகிறார்கள்? போட்டியிட்டாலும் ஜெயிக்க முடியுமா ? நாங்கள் பெயரில் இருந்து சாதியை ஒழித்து விட்டோம் என்பதே நமது இத்தனை நாள் சாதனை அல்லவா ?

நான் திருமாவுடன் சேர்ந்து புகைப்படம் எடுத்தது பிடிக்காத ஒரு நண்பருடன் காரசாரமாக விவாதம் செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. எனக்கு மிகவும் அதிர்ச்சி அளித்த விஷயம். நான் இப்போது யோசித்து பார்க்கும்போது இங்கே நடக்கும் எல்லா விடயங்களில் காற்றைப் போல் சாதி நிறைந்திருக்கிறது என்பது மறுக்க முடியாத உண்மை தானே ?

ஒரு மனிதனை அவன் பெயரினை வைத்தும், ஊரின் பெயரைக் கொண்டும், பேச்சு வழக்கினை வைத்தும், பழக்க வழக்கங்களை கொண்டும் நுண்ணியமாக சாதியை துப்பறிந்து செய்தே வாழும் சமூகத்தில் ராஜா நேரடியாக கேட்டதில் தவறு இருக்கிறதா என்று தெரியவில்லை.

ஆகையால் ராஜாவின் மேல் கல் எறியும் முன் தங்களை சுய பரிசோதனை செய்து கொண்டு உத்தமர் என்றால் கல் எறியவும்.

**மாற்றம் ஒன்றே மாறாதது**

தகவல் தொழில் நுட்ப துறையில் பணிபுரிபவர்கள் மட்டுமின்றி இப்போதுள்ள நிலையற்ற AI உலகில் மாற்றம் என்பது நாம் நம்ப முடியாத வகையில் மிக வேகமாக நடந்து முடிந்து விடுகிறது.

நேற்று மிக உயரிய பதவியில் இருந்தவர்கள் ஒரே நாளில் நிர்வாக ரீதியான மாற்றங்களால் பணி இழப்பு அல்லது முன்பு செய்த வேலையைவிட கீழே மற்றவருக்கு கீழே வேலை செய்யும் நிலை என்பது மிகவும் சாதாரணம். 'நான் அந்தக் காலத்தில் பெரிய யானையாக்கும்' என்ற சவடால் எல்லாம் இந்த யுகத்தில் எடுபடாது.

எனது உயரதிகாரி "who moved my cheese" என்ற புத்தகத்தை தந்து படிக்க சொன்னார் . மிக எளிய புத்தகம். நாம் சிறுவயதில் மீன்கள் பற்றிய "வருமுன் காப்போம் , வந்த பின் காப்போம்" என்ற கதையினை படித்திருப்போம் தானே. அதனுடைய ஒரு improved version.

இந்தக் கதையானது cheese எனும் நாம் எல்லோரும் தேடி அலையும் பொருள் எனும் படிமம் . இது உங்கள் வேலை, லட்சியம் அல்லது ஏதாவதொரு விருப்பப் பொருளாக இருக்கலாம். அந்த தேடலில் மாற்றம் என்பது மாறாதது. நான்கு பாத்திரங்கள் - sniffy -மாற்றத்தை முதலில் மோப்பமிட்டு கண்டுபிடிக்கிறவன் , scurry - மாற்றத்தை உணர்ந்து கொண்டு அதற்கேற்ப தகவமைத்து கொள்பவன் , Hem - மாறாமல் தற்போதுள்ள நிலையிலேயே வாழ்ந்து கொண்டு நிலைமை மாறிவிடும் என்று நினைப்பவன் , Haw - முதலில் மாறிவிடும் என்றெண்ணி பிறகு மாற்றத்தை உணர்ந்துகொண்டு வேறு வழி தேடிக்கொண்டு முன்னேறுபவன்.

நாம் எல்லாரும் இந்தக் கதையில் வரும் இந்த நான்கு கதாபாத்திரங்கள் போலத்தான் நடந்து கொள்கிறோம். மாற்றம் என்பது நிலையானது. நாம் வாழும் காலத்தில் நம்மை சுற்றி நடக்கும் மாற்றங்களை உணர்ந்து கொண்டு அதற்கேற்றவாறு நடந்து கொண்டால் " நமக்கு மட்டும் ஏன் இவ்வாறு நடக்கிறது" என்று நொந்து கொள்ளாமல் நம் வாழ்க்கையை கவலை இல்லாமல் வாழலாம்.

சிறிய புத்தகம் தான். அது சொல்லும் விஷயம் மிகப்பெரியது மற்றும் மிகவும் முக்கியமானதும் கூட.

**நிறவெறியும் , கால்பந்து விளையாட்டுகளும்**

Say No to Racism என்ற பதாகைகளையும், வாசகங்கள் பொறிக்கப்பட்ட ஆடைகளையும் அணிந்து கொண்டு விளையாட்டு வீரர்கள் UEFA Champions League ஐரோப்பிய அளவிலான கிளப் விளையாட்டு பந்தயங்களை நாம் பார்த்திருக்கிறோம் தானே. ஆனால் இந்த விளையாட்டுகளின் போது நாம் தவறாமல் காண்பது ரசிகர்கள் மற்றும் வெள்ளையின விளையாட்டு வீரர்களின் நிறவெறி துவேஷ நடவடிக்கைகளையே .

கடந்த பெப்ரவரி மாதம் Real Madrid அணிக்கும் Benfica அணிக்கும் இடையேயான விளையாட்டு போட்டியில் ரியல் மாட்ரிட் அணியைச் சார்ந்த . Vinicius Jr. பார்த்து பென்பிக்காவின் Gianluca Prestianni தனது சட்டையின் மூலம் வாயினை மறைத்துக்கொண்டு 10 முறை குரங்கு என்று நிறவெறி கோஷம் எழுப்பினார். இதனால் ஆட்டம் சிறிது நேரம் தடைப்பட்டது. இதைப்பற்றி கேட்டதற்கு Benfica அணி மேலாளர் Jose Mourinho அதற்கு சம்பந்தமில்லாத பதிலைக் கூறி விஷயத்தை திசை திருப்ப முயன்றதை Thierry Henry கண்டித்தார்.

UEFA அமைப்பு Prestianni மீது பத்து ஆட்டங்கள் விளையாட தடைசெய்துள்ளது. விசாரணை நடைபெற்று வருகிறது. நிரூபிக்கப்பட்டால் ஆயுள்கால தடைக்கு வாய்ப்புள்ளது.

இதில் ஆச்சர்யப்படும் விஷயம் என்னவென்றால் பெரும்பாலான ஊடகங்கள் இதை பெரிதுபடுத்தவேயில்லை. உங்களுக்கு வந்தால் ரத்தம். எங்களுக்கு வந்தால் தக்காளி சட்னி போலத்தான்.

**ராஜனுக்கு ராஜன் எங்க ரெங்கராஜன் தான் ( சுஜாதா )**

வருடந்தவறாமல் சுஜாதாவின் நினைவுநாளை (பெப்ரவரி 27) ஒட்டி தமிழ்பேசும் இணைய உலகில் ஒரு தகவல் பரப்பப்படும் மற்றும் அதையொட்டி வழக்கமான காரசார விவாதங்கள் நடக்கும். அதாவது சுஜாதா ஒரு இலக்கியவாதி அல்லர், வெறும் பத்தி எழுத்தாளர் . அதாவது pulp fiction எழுத்தர் என்பதே.

ஒவ்வொரு முறையும் இந்த அற்பக் குற்றசாட்டு எழும் போதெல்லாம் நான் தவிர்த்துவிடுவேன். இப்படிச் சொல்பவர்கள் பெரும்பாலும் அவர் எழுத்தை வாசித்திராதவர்கள் அல்லது அவர் இடத்தை பகீரதப்பிரயத்தனம் செய்தும் அடையவே முடியாதவர்கள் என்பதே.

சுஜாதா நிச்சயமாக அசோகமித்திரன் போன்று கரைந்த நிழல்கள், 18 ஆவது அட்சரக்கோடு என காலத்தால் அழிக்க முடியாத நாவல்கள் எழுதவில்லை தான். ஆனால் அவர் எழுதிய தளத்தை பார்க்கவேண்டும். பெரும்பாலும் வெகுஜன மக்கள் படிக்கும் ஆனந்த விகடன், குமுதம் போன்ற இதழ்களில் தான். அதே காலத்தில் வாழ்ந்த அமி போன்று ஏன் எழுதவில்லை. எழுதியிருக்கலாம் தான்.



**ஆனந்தன் வசந்தா கிருஷ்ணமூர்த்தி**

சுஜாதாவின் அறிவியல் புனைகதைகள் காலாவதியாகி விட்டன என்கின்றனர். கிட்டத்தட்ட எல்லா புனைகதை எழுத்தாளர்களுக்கும் இதே கதை தான். சுஜாதா வெறும் அறிவியல் புனைகதை மட்டும் எழுதவில்லை. அவர் சங்க இலக்கியங்கள், சினிமா ,வரலாறு ,நாடகம் ,கலை என்று எல்லாவற்றையும் பற்றி எழுதியிருக்கிறார். ஒன்று நினைவில் வைக்கவும். நாமெல்லாம் (அதாவது 80-90களில்) அறிவியல் புனைகதை என்றால் என்ன என்பதை அவரிடமே கற்றுக்கொண்டோம். கற்றதும் கேட்டதும் பத்தியின் மூலமாக அறிவியல் அதிகமாக தெரிந்துகொண்ட தலைமுறை நாங்கள்.

தமிழில் குறிப்பிடத்தகுந்த நிறைய நல்ல சிறுகதைகள் எழுதியிருக்கிறார். நகரம், பேப்பரில் பேர், விலை, மாஞ்சு, உஞ்சவிருத்தி ,குருபிரசாத்தின் கடைசித் தினம் என்று நிறைய சொல்லிக்கொண்டே போகலாம். அதுவும் 70=80 களின் மதுரையைப் பற்றி ஓரிரு பத்திகளில் விவரிக்கும் நகரம் கதை உலகின் மிகச்சிறந்த கதை என்பது யாராலும் மறுக்க முடியாது. அந்தக் கதையின் வரிகளை இங்கே தருகிறேன். படியுங்கள்

"சுவர்களில் ஓரடி உயர எழுத்துகளில் விளம்பரங்கள் வித விதமாக ஒன்றி வாழ்ந்தன. நிஜாம் லேடி புகையிலை ஆர்.கே.கட்பாடிகள்எச்சரிக்கை! புரட்சித் தீ! சுவிசேஷக் கூட் டங்கள் ஹாஜி மூசா ஜவுளிக்கடை (ஜவுளிக்கடல்)30.09.73 அன்று கடவுளை நம்பாதவர்கள் சுமக்கப் போகும் தீச்சட்டிகள். மதுரையின் ஒரு சாதாரண தினம். எப்போதும் போல 'பைப்' அருகே குடங்கள் மனிதர்களுக்காக வரிசைத் தவம் இருந்தன. சின்னப் பையன்கள் 'டெட்டானஸ்' கவலையின்றி மண்ணில் விளையாடிக்கொண்டு இருந்தார்கள். பாண்டியன் போக்குவரத்துக் கழக பஸ்கள் தேசியம் கலந்த டீசல் புகை பரப்பிக்கொண்டு இருந்தன. விறைப்பான கால்சராய் சட்டை அணிந்த, ப்ரோட்டீன் போதா போலீஸ்காரர்கள் 'இங்கிட்டும் அங்கிட்டும்' செல்லும் வாகன மானிட போக்குவரத்தைக் கட்டுப்படுத்திக்கொண்டு இருந்தார்கள். நகரின் மனித இயக்கம் ஒருவித ப்ரௌனியன் இயக்கம்போல் இருந்தது (பௌதிகம் தெரிந்தவர்களைக் கேட்கவும்.) கதர் சட்டை அணிந்த மெல்லிய, அதிக நீளமில்லாத ஊர்வலம் ஒன்று சாலையின் இடதுபுறத்தில் அரசாங்கத்தை விலைவாசி உயர்வுக்காகத் திட்டிக்கொண்டே ஊர்ந்தது. செருப்பில்லாத டப்பாக் கட்டு ஜனங்கள், மீனாட்சி கோயிலின் ஸ்தம்பித்த கோபுரங்கள், வற்றிய வைகை, பாலம் மதுரை! "

நான் 80களில் பார்த்த நானே மறந்து போன மதுரையில் எவ்வளவு இலகுவாக வெறும் நூறு வார்த்தைகளில் வர்ணித்திருக்கிறார். யாராவது இந்தக்கதையை திரைப்படமாக எடுக்கவேண்டுமானால் சிரமப்பட தேவையேயில்லை .அவரே காட்சிகளை வர்ணித்திருக்கிறார். மதுரைக்காரர்களுக்கே தெரியும் ஹாஜீமுசா என்பது ஜவுளிக்கடல் . டெட்டனஸ், ப்ரௌனியன் மூவ்மெண்ட், ப்ரோடீன் என்ற அறிவியல் விஷயங்கள். அப்புறம் அந்த நாட்களில் மதுரையின் சுவர்களில் நான் கண்ட புரட்சி இயக்கங்களின் சுவரொட்டி வாக்கியங்கள். பெரும்பாலான மக்கள் மறந்து போன பாண்டியன் போக்குவரத்து கழக பேருந்துகள் (ஈயம் பூசிய வண்ணத்தில் ஓடிய ) எத்துணை விஷயங்களை இந்த ஒரு சில வாக்கியங்களில் சொல்லியிருக்கிறார் பாருங்கள்

வாத்தியாரே - யார் என்ன சொன்னாலும் நீங்கள் ஒரு பெரிய மேதை தான்.


CEYLON EXPRESS
MONEY TRANSFER
Best Rates Guarantee
Same Day Bank Transfer
Responsible Customer Support
Easy, Quick Internet Money Transfer
282-284, londales st, Dandenong
CONTACT : OSMAN 0402 396 052


MS JEWELRY WORK SHOP
No:- 87, McIntyre Road, Sunshine North VIC 3020 (Inside Barber Shop)
WORKING DAYS
MON - SUN (10 AM TO 6 PM)
WEDNESDAY (CLOSED)
+61 469 033 450
காது குத்துதல், பழைய நகைகள் திருத்துதல், உடைந்த நகைகள்
ஒட்டுதல் மற்றும் புதிய நகைகள் என்பன செய்து கொடுக்கப்படும்
Ear Piercing, Old Jewelry Repair, Broken Jewelry Repair, and New Jewelry Will Be Provided

# மாத ராசிபலன்



## மேடம்

வேலையிடத்தில் முன்னேற்றம் ஏற்படும். நிதி விஷயங்களில் சில இரண்டு முதலீடுகள் உங்களுக்கு நல்ல செய்திகளைக் கொண்டு வரக்கூடும். இம்மாதம் உங்கள் ஆரோக்கியத்திலும் முன்னேற்றத்தைக் கொண்டு வந்து நல்வாழ்வுக்கு வழி வகுக்கும்.

குடும்பத்தில் எல்லாம் நன்றாகத் தோன்றினாலும், மனதில் சில சோகம் இருக்கவே செய்யும். பயணங்களைத் தள்ளிப்போடுவது நல்லது. மாத இறுதியில், சூழ்நிலைகள் திடீரென்று உங்களுக்குச் சாதகமாக மாறும், மேலும் நீங்கள் வாழ்க்கையில் வெற்றியை அடைவீர்கள்.

## இடபம்

சிந்தனைமிக்க முடிவுகள் நன்மை பயக்கும். வேலையில் படிப்படியாக முன்னேற்றம் ஏற்படும். இம்மாதம் உங்கள் உடல்நலமும் படிப்படியாக மேம்படும். இந்த மாதம் பயணம் செய்வது உங்கள் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்யாவிட்டாலும், நேர்மறையான பலன்களைத் தரும்.

நிதிச் செலவுகளும் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது, மேலும் ஒருவரின் உடல்நலம் கவலைக்குரியதாக இருக்கலாம். மார்ச் மாத இறுதியில், விஷயங்கள் மேம்படும், மேலும் உங்களுக்கு சில நல்ல செய்திகள் கிடைக்கலாம்.

## மிதுனம்

உங்கள் வேலையில் முன்னேற்றம் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் கிடைக்கும். சில நல்ல செய்திகள் கிடைக்கலாம். நிதி ரீதியாக இந்த மாதம் கடினமாக இருக்கும், மேலும் திடீரெனப் பணம் செலவழிக்கும் சூழ்நிலைகள் ஏற்படலாம்.

மார்ச் மாதத்தில் நீங்கள் தேவையற்ற வாக்குவாதங்களில் சிக்கிக் கொண்டால், அது உங்கள் ஆரோக்கியத்தில் பாதகமான விளைவை ஏற்படுத்தும். எனவே, தியானம் மற்றும் யோகா மூலம் உங்கள் வாழ்க்கையில் சிறந்த சூழ்நிலைகளை உருவாக்கினால் அது சிறப்பாக இருக்கும். காதல் படிப்படியாக உங்கள் வாழ்க்கையில் நுழையும். குடும்பத்தில் ஒரு பெண் காரணமாக நீங்கள் சிரமப்படுவீர்கள்.

## கடகம்

நீங்கள் கவனக்குறைவாக செயற்படவில்லை என்றால், உங்கள் வேலைத் துறையில் முன்னேற்றத்துக்கான பாதை அமைக்கப்படும். நிதி விஷயங்களில் முன்னேற்றத்திற்கான பல வாய்ப்புகளை நீங்கள் காண்பீர்கள். உங்கள் ஆரோக்கியமும் கணிசமாக மேம்படும்.

உங்கள் குடும்பத்தில் ஏதேனும் வெளிப்புறத் தலையீடு கஷ்டங்களை அதிகரிக்கக்கூடும், கவனமாகப் பரிசீலித்த பிறகு முடிவுகளை எடுப்பது நல்லது. காதல் உறவுகளில் அதீத உணர்ச்சிகரமாக எடுக்கப்படும் முடிவுகள் உங்கள் கஷ்டங்களை அதிகரிக்கக்கூடும்.

## சிம்மம்

வேலையிடத்தில் முன்னேற்றம் ஏற்படும். மேலும் ஒரு பெண்ணின் உதவியுடன், வாழ்க்கையில் மகிழ்ச்சி மற்றும் செழிப்புக்கான வாய்ப்புகள் இருக்கும். உங்கள் குடும்பத்தில் இனிமையான நேரங்கள் இருக்கும், ஒரு தந்தையைப் போன்ற நபரின் உதவியுடன், வாழ்க்கையில் மகிழ்ச்சியையும் அமைதியையும் பெறுவீர்கள். இந்த மாதம் நீங்கள் பயணம் செய்யாமல் இருப்பது நல்லது.

உங்கள் ஆரோக்கியத்திலும் பாதகமான விளைவுகள் ஏற்படும். காதல் உறவுகளில் பரஸ்பர அன்பு வலுப்பெறும். மேலும் சில புதிய முதலீடுகளால் செலவுகள் அதிகமாக இருக்கும். இந்த மாத இறுதியில் கூட, உணர்ச்சி ரீதியான காரணங்களால் மனம் அமைதியற்றதாகவே இருக்கும்.

## கன்னி

உங்கள் குடும்பத்தினருடன் இனிமையான நேரத்தை அனுபவிப்பீர்கள். இந்த மாதம் பயணம் செய்வது ஆரம்பத்தில் சில பயங்களைத் தரக்கூடும், ஆனால் நீங்கள் பயணம் செய்ய தைரியத்தைத் திரட்டினால், அது மகிழ்ச்சியையும் செழிப்பையும் தரும்.

இந்த மாதம் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களும் தெரியும். உங்கள் நல்வாழ்வு அப்படியே இருக்கும். வேலையில் ஒரு தாய் போன்ற நபரின் உதவியுடன், உங்கள் வாழ்க்கையில் அமைதியையும் மகிழ்ச்சியையும் காண்பீர்கள், மேலும் உங்கள் திட்டங்கள் வெற்றியை நோக்கி முன்னேறும். நிதி வாய்ப்புகளும் உருவாகி வருகின்றன. உங்கள் காதல் வாழ்க்கையில் நீங்கள் தனிமையாக உணரலாம், மேலும் உங்களுக்கு உரிய கவனம் கிடைக்கவில்லை என்று நீங்கள் உணரலாம்.

## துலாம்

உங்களுக்கு நிறைய நன்மைகள் காத்திருக்கின்றன. இந்த மாதம் நிதி விஷயங்களுக்கு சாதகமானது. மேலும் செல்வம் பெருகுவதற்கான வாய்ப்புகள் அதிகம். நீங்கள் சில சுகாதார நடவடிக்கைகளைத் தொடங்கி செயல்படுத்தினால், ஆரோக்கியத்துக்கான பாதை திறக்கும். உங்கள் குடும்பத்தின் மீது நீங்கள் கவனக்குறைவாக இருந்தால், வாழ்க்கையில் பிரச்சினைகள் ஏற்படும்.

பணியிடத்திலும், சில திட்டங்களிலிருந்து தூரம் அதிகரிக்கலாம் அல்லது சில இழப்புகள் ஏற்படுவதற்கான வாய்ப்பு அதிகரிக்கிறது. மாத இறுதியில் நீங்கள் முன்னோக்கிப் பார்த்து வாழ்க்கையில் முடிவுகளை எடுத்தால், சிறந்த பலன்கள் கிடைக்கும்.

## விருச்சிகம்

உங்கள் காதல் வாழ்க்கை துடிப்பானதாக இருக்கும், மேலும் பரஸ்பர அன்பு வளரும் நிதி விஷயங்களில் நீங்கள் கொஞ்சம் கட்டுப்படுத்தப்பட்டதாக உணரலாம், புத்திசாலித்தனமாக முதலீடு செய்வது நல்லது.

இந்த மாதம், நீங்கள் உடல்நலப் பிரச்சினைகளையோ அல்லது ஒரு பெண்ணின் உடல்நலம் குறித்த அதிகரித்த கவலைகளையோ சந்திக்க நேரிடும். குடும்ப விஷயங்களில் மற்றவர்கள் உங்களை ஆதிக்கம் செலுத்த முயற்சிப்பார்கள், மேலும் அவர்களின் கருத்துகளை உங்கள் மீது திணிக்க முயற்சிப்பார்கள்.பயணத்தை ஒத்திவைப்பது நல்லது, இல்லையெனில், பயணத்தின் போது பதற்றம் அதிகரிக்கும்.

## தனுசு

நீங்கள் ஒரு புதிய சுகாதார நடவடிக்கையை நோக்கிச் செல்வீர்கள். நிதி விஷயங்களில் செல்வம் அதிகரிக்கும் வாய்ப்புகள் இருந்தாலும், அவை உங்கள் எதிர்பார்ப்புகளை விட குறைவாக இருக்கும். உங்கள் காதல் வாழ்க்கை வலுவடையும்.

வேலையில் 'ஈகோ' மோதல்களைத் தவிர்ப்பது நல்லது, இல்லையெனில், ஒரு புதிய திட்டம் இந்த மாதம் உங்கள் பிரச்சினைகளை அதிகரிக்கக்கூடும். நீங்கள் குடும்பத்தில் தனிமையாக உணருவீர்கள், உள்மனத் துக்கம் உங்களை விழுங்கும். உங்கள் வாழ்க்கையில் பல நேர்மறையான மாற்றங்களைக் காண்பீர்கள், காலச்சுழற்சி இப்போது உங்களுக்கு சாதகமான மாற்றங்களைக் கொண்டு வரும்.

## மகரம்

வேலையில் முன்னேற்றத்திற்கான வாய்ப்புகள் படிப்படியாக உருவாகி வருகின்றன திட்டங்கள் வெற்றிப் பாதையில் முன்னேறும்.

இந்த மாதம் நிதி விஷயங்களில் நீங்கள் எடுக்கும் கடின உழைப்பு எதிர்காலத்தில் பலனளிக்கும். பயணம் வெற்றியைத் தரும், குடும்பத்தில் ஒரு இளைஞரைப் பற்றிய கவலைகள் அதிகரிக்கும், மேலும் ஈகோ மோதல்களும் அதிகரிக்கலாம். ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உணர்ச்சிக் காரணிகள் உங்கள் ஆரோக்கியத்தை மோசமாக பாதிக்கும். மார்ச் மாத இறுதியில், எதிர்பாராத சில செய்திகளைப் பெற்ற பிறகு நீங்கள் சோகமாக உணருவீர்கள்.

## கும்பம்

உங்கள் உடல்நலம் கணிசமாக மேம்படும். இது மேம்பட்ட நல்வாழ்வுக்கு வழி வகுக்கும். உங்கள் குடும்பத்தில் ஒரு தாய் போன்ற நபரின் உதவியுடன் வாழ்க்கையில் அமைதியையும் மகிழ்ச்சியையும் காண்பீர்கள். நிதி விஷயங்களில் நிதானத்தைக் கடைப்பிடிக்கவும், இல்லையெனில் செலவுகள் அதிகரிக்கும். வேலையில் உங்களுக்கு கலவையான அனுபவங்கள் இருக்கலாம், மேலும் உங்கள் கருத்துகளை வெளிப்படையாக வெளிப்படுத்த வேண்டும், இல்லையெனில், சிரமங்கள் அதிகரிக்கக்கூடும்.

## மீனம்

உங்கள் வேலைத் துறையில் முன்னேற்றம் ஏற்படும், மேலும் உங்கள் அன்புக்குரியவர்கள் உங்கள் திட்டத்தை வெற்றிகரமாக்க உங்களுக்கு உதவுவார்கள். நிதிக் கண்ணோட்டத்தில், நேரம் நன்றாக இருக்கும். உங்கள் குடும்பத்துடன் இனிமையான நேரத்தை செலவிடுவீர்கள், உங்கள் மனம் மகிழ்ச்சியாக இருக்கும். மார்ச் மாதத்தில், ஒரு இளைஞரின் ஆரோக்கியத்தைப் பற்றி நீங்கள் சோகமாக இருக்கலாம். இந்த மாதம் உணர்ச்சி ரீதியாக கடினமாக இருக்கும், உங்கள் மனம் அமைதியற்றதாக இருக்கும். மாத இறுதியில் உங்களுக்கு சில நல்ல செய்திகள் கிடைக்கக்கூடும்.

HavenHill
REAL ESTATE

# Thinking of Selling? Sell Smart pay only 1% Commision.

**Selling your home is a big moment.**

That's why we focus on the most important things:
getting you the strongest result, with a smarter, fairer fee structure.

**With Sell Smart, you get:**

- Professional marketing
- Strategic buyer targeting
- Confident negotiation
- A premium, boutique experience

SELL SMART.
SAVE MORE.
ACHIEVE BETTER.



**Shagi Pathmanathan**
Founder / Director
**0413 076 585**
shagi@havenhillrealestate.com.au

**Yasantha De Silva**
Founder / Director
**0432 805 336**
yasantha@havenhillrealestate.com.au

Level 10, 14 Mason St, Dandenong VIC 3175
havenhillrealestate.com.au

Terms and Conditions apply*


PARBOILED RICE
Muthu Sampa Rice
ATHAVAN
PRODUCTS
Jaffna
CURRY POWDER
PREMIUM
MOONG DAL
(Roasted)
Soya Meat
CHILLI POWDER
EVERYTHING
YOU NEED
ALL IN ONE PLACE!
FAST
DELIVERY
THIS WAY UP
ஆதவன்
ATHAVAN
Cargo Service
Australia to
Sri Lanka
Sri Lanka to
Australia
BEST SERVICES:
Cargo & Shipping Services
Groceries & Household Items
Spices Export & Import
Pooja Products
Boutique Dress & Saree Collection
Contact Us For Details
Sri Ayyappa Pvt LTD
+61 449 722 392
40 David street, Dandenong VIC 3175, Australia
ஆதவன்
ATHAVAN
ஸ்ரீ
AYYAPPA
ATHAVAN